பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 28 வெள்ளிக்கிழமை (14.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 18

# அரசின் தலைவிதி இன்று மாலை தெரியும்; பக்கம் மாறும் எம்.பிக்கள் நிர்ணயிப்பர்

## ஜே.வி.பி. காப்பாற்றலாம் என்று ஊகம்

கொழும்பு, டிசம்பர் 14

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பை இக்கட்டான பின்னணியில் அரசு இன்று சந்திக்கின்றது. இந்த வாக்கெடுப்பில் அரசு தோற்குமானால் அது கவிழும் நிலை ஏற்படலாம் என்ற சூழலில், அரசை மண்கவ்வ வைக்கும் முழு முயற்சியில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டிருக்கின்றன என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வரவு - செலவுத் திட்டத்தின் 2 ஆவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் 118 - 102 என்ற அடிப்படையில் 16 அதிகப்படி வாக்குகளுடன் அரசுத் தரப்பு வென்றிருந்தது.

அரசுத் தரப்பிலிருந்து எட்டு உறுப்பினர்கள் எதிரணிக்கு மாறினால் இந்தச் சமன்பாடு இரு தரப்புக்கும் சமனாக முடியும் என்ற நிலையில் நாடாளுமன்றில் அட்சரகணிதப் போட்டி இன்று இடம்பெறுகின்றது.

கடந்த தடவை வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் இருவரும் இம்முறை வாக்களிப்பில் கலந்துகொண்டு அரசுத் தரப்புக்கு எதிராக வாக்களிப்பர் என எதிர்பார்க்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம்,டிச.14

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று இடம்பெறவிருந்த பயணிகள் கப்பல் சேவை ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று பலாலி படைத் தலைமையகம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

தற்போதைய காலநிலை காரணமாக ரத்துச்செய்யப்பட்ட சேவை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - குறுகிய நேர அறிவிப்பில் பயணத்தை மேற்கொள்ள தயாராக இருக்கவேண்டும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## அன்ரன் பாலசிங்கத்தின் நினைவுதினம் இன்று

கிளிநொச்சி, டிச. 14

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்தின் முதலாம் வருட நினைவு தினம் இன்றாகும்.

நினைவு தினத்தையொட்டி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் எங்கும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

நினைவுப் பேருரைகள், கலை நிகழ்வுகள், நினைவஞ்சலிகள் உட்படப் பல்வேறு நிகழ்ச்சிகள் ஆங்காங்கே இடம்பெறவிருக்கின்றன.

புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களும் 'தேசத்தின் குரலை' தத்தமது நாடுகளில் இருந்துகொண்டே உணர்ச்சிபூர்வமாக நினைவுகூர ஏற்பாடுகள் செய்யப்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டு நலனுக்கு உழைக்கும் அரசு மூலம் சமாதான வாய்ப்பை உருவாக்க வேண்டும்

## சர்வமத மாநாட்டில் அமரபுர அநுநாயக்கர்

யாழ்ப்பாணம்,டிசெ.14

இலங்கையில் ஒழுங்கான அரசு ஒன்றை, நாட்டு நலனுக்கு முக்கியத்துவமும் முதலிடமும் கொடுக்கும் அரசு ஒன்றை உருவாக்கி, சமாதானத்திற்கான வாய்ப்பை உண்டாக்க வேண்டும்-

சமயத் தலைவர்கள் மாநாட்டில் இங்கு பங்குகொண்டுள்ள ஜப்பானின் விசேட தூதுவர் சமாதானத்தைக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். ஆனால், அதற்கான அறிகுறிகள் தென்படவில்லை-

இவ்வாறு தெரிவித்தார் அமரபுர நிக்காயாவின் அநுநாயக்கரான வண. கொற்றுகொட தம்மவன்ஸ தேரர்.

சர்வமதத் தலைவர்களின் சர்வதேச மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வில் உரையாற்றிபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். பொது நூலகத்தில் நடைபெற்ற இரண்டாம் நாள் மாநாடு நேற்று நண்பகலுடன் முடிவுற்றது. மாநாட்டின் நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில் அமரபுர நிக்காயாவின் அநுநாயக்கர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

(08 ஆம் பக்கம் பார்க்க)



சர்வமதத் தலைவர்களின் சர்வதேச மாநாட்டின் இறுதி அமர்வின்போது வண தம்மவன்ச தேரர் உரை ஊரையாற்றுகிறார். (படங்கள்:- வரன்)

# பலாலி சென்ற பயணிகள் விமானம் தரையிறக்க முடியாது திணறியது

## 2½ மணிநேர அவஸ்தையின் பின் பத்திரமாகத் தரையிறக்கம்

கொழும்பு, டிச.14

ஐம்பது பயணிகளுடன் நேற்றுமுற்பகல் 11 மணிக்கு இரத்மலானையிலிருந்து பலாலிக்குப் புறப்பட்ட உள்ளூர் பயணிகள் விமானம், மீண்டும் தரையிறங்குவதற்கு அதன் தரையிறங்கு 'கியர்கள்' (Landing gear) வேலை செய்யாத காரணத்தால் பலாலி, இரத்மலானை, கட்டுநாயக்கா என மூன்று விமான நிலையங்களின் மீதும், நீண்ட நேரம் வட்டமிட்ட பின்னர் 'கியர்' விழாத நிலையில் இரத்மலானையில் கட்டாயத் தரையிறக்கம் (Force Landing) செய்யப்பட்டது. எனினும் பயணிகள் பாதிப்பு ஏதுமின்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# 'சீலிங்' இற்குள் ஒளிந்திருந்த இருவர் குண்டை வெடிக்க வைத்துத் தற்கொலை

## பருத்தித்துறை வியாபாரி மூலையில் சம்பவம்

யாழ்ப்பாணம்,டிச.14

பருத்தித்துறை, வியாபாரிமூலையிலுள்ள வீடொன்றின் கூரை 'சீலிங்' இற்குள் ஒளிந்து இருந்தனர் எனக் கூறப்படும் இருவரை நோக்கி படையினர் மற்றும் பொலிஸார் நெருங்கியபோது அந்த நபர்கள் தாம் வைத்திருந்ததாகக் கூறப்படும் தற்கொலை அங்கியை வெடிக்கவைத்துத் தற்கொலை செய்து கொண்டனர். இச்சம்பவத்தில் அந்த வீட்டில் இருந்த 45 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இருவர் உட்பட 5 பிள்ளை

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கில் கடும் காற்றும் கன மழையும்

யாழ்ப்பாணம்,டிச.14

வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள தாழமுக்கத்தினால் நாட்டின் வட - கிழக்குத் திசைகளில் 40 முதல் 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்றுவீசிக்கொண்டிருப்பதாகவும் அது 60 கி.மீ. வேகத்துக்கு அதிகரிக்கக்கூடும் என்றும் வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று ஆகப்பிந்தி விடுக்கப்பட்ட காலநிலை அறிக்கையின் பிரகாரம் -

(08 ஆம் பக்கம் பார்க்க)

# அரசுத் தரப்பின் எம்.பிக்களில் சிலர் 'ஜெய்ஹில்டன்' ஹோட்டலில் முடக்கம்?

கொழும்பு, டிச. 14

நாடாளுமன்றில் இன்று வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பின் மீது வாக்கெடுப்பு நடக்கும்போது அரசுத் தரப்பின் எம்.பிக்கள் சிலர் அரசுக்கு எதிராக வாக்களிக்கலாம் என்ற பீதியில், அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசு கொழும்பிலுள்ள பிரபல ஐந்து நட்சத்திர விடுதி ஒன்றில் - பலவந்தமாக - 50,60 மெய்ப் பாதுகாவலர்கள் சூழ தடுத்து வைத்திருக்கின்றது. இது கேலிக்கூத்தான விடயம்.

- இவ்வாறு அம்பலப்படுத்தியிருக்கிறது அரசிலிருந்து நேற்று முன்தினம் வெளியேறிய முஸ்லிம் காங்கிரஸ்.

முகாவின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் நேற்றுமுற்பகல் கொழும்பிலுள்ள மு.காவின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இந்தத் தகவலை வெளியிட்டார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கொழும்பிலுள்ள பிரபல ஐந்து நட்சத்

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

ஸ்ரீ அம்மா பகவான் சரணம்



## ஸ்ரீ அம்மா பகவான் வரதீட்சை மாலை வழங்குதல்

மேற்படி இந்நிகழ்வு யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் 15ஆம் திகதி சனிக்கிழமையும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் முற்பகல் 10 மணிமுதல் 12 மணிவரையும் ஸ்ரீ அம்மா பகவானின் பக்தர்களுக்கு வரதீட்சை மாலை வழங்கப் படவுள்ளது. இம்மாலையை அணிய முற்கூட்டியே பதிவு செய்தவர்களும் அணிய விரும்புகிறவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு:
**ஸ்ரீ கல்கி ஆன்மீக மையம்,**
மணியர்பதி லேன், கொக்குவில் (மேற்கு),
யாழ்ப்பாணம் - இலங்கை.
போன்: 021 222 2935

(68937)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் துரைராஜா



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், மாதகலை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய வைத்திலிங்கம் துரைராஜா 11.12.2007 செவ்வாய்க் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் வைத்திலிங்கம்-சரஸ்வதி தம்பதியினரின் புதல்வனும், பாலசுப்பிரமணியம் (அமரர்), பூமணி (அமரர்) ஆகியோரின் சகோதரனும், சரஸ்வதியின் (செல்லமணி) கணவரும், ரவீந்திரராஜா (ரவி - சுங்கத் திணைக்களம், கட்டுநாயக்கா), மணிமாறன் (பாபு-கனடா), தேவிகா (வவி-கனடா), அனுராதா (ராதி-கனடா) ஆகியோரின் தந்தையும் பாலச்சந்திரன், வளர்மதி, வரதராஜா, திருஉமா ஆகியோரின் மாமனும், செந்தூரன், ஜனார்த்தனன், காயத்திரி, அஞ்சனா, அஜித், பிரவீன், கம்ஷ்வேணி, சிந்துஜன், ரஜந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வெள்ளவத்தையில் 16.12.2007 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விபுலானந்தர் வீதி,
மாதகல்.

தகவல்:
சீவரட்ணம் (மைத்துனர்)

(689943)

## அந்தியேட்டி அழைப்பு

மலர்வு 29 ✱ 09 ✱ 1932



உதிர்வு 15 ✱ 11 ✱ 2007

### அமரர் இராமலிங்கம் கந்தசாமி

(யா/கம்பர்மலை ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர்)

*15.11.2007 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (15.12.2007) சனிக்கிழமை காலை நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

**பிள்ளைகளும், மருமக்களும்,**
தம்பி - **பரமசாமி**
[இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர்].

(68938)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 26 . 08 . 1926



மறைவு 14 . 11 . 2007

### அமரர் சின்னப்பொடி அருமைநாயகம்

(பெரியதம்பி)

கடந்த 14.11.2007 அன்று காலமான எமது தந்தையின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (14.12.2007) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு: அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.*

70, கடற்கரை வீதி,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

(68939)

**குடும்பத்தினர்.**

## நன்றியுடன்...

கடந்த ஞாயிற்றுக்கிழமை (9.12. 2007) என்னால் தவறிவிடப்பட்ட முக்கிய ஆவணங்கள் பணம் ரூபா 8984 அடங்கிய பணப் பையை செம்மணி சோதனைச் சாவடியில் கண்டெடுத்து அரியாலை இராணுவ முகாம் பொறுப்பதிகாரியின் ஊடாக எனக்கு வழங்கியமைக்காக சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி.தர்மலிங்கம்**
24, மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**Barathy Institute - சித்தன்கேணி**

A/L இரசாயனவியல் (2008/2009) Batch
ஆரம்பம் 15.12.2007 தொடக்கம் ✱சேதன இரசாயனவியல் ✱பௌதிக இரசாயனவியல் அலகு ரீதியாக
Personal Class T.Paraparan (B.Sc.(Cey) MSc(Cey) Chemistry
T.P. 0776038913

## தவறிவிட்டது

[illegible] (881921618V) [illegible] 21.11.2007 [illegible] தவறிவிட்டது. [illegible]

(68935)

## வீடு விற்பனைக்கு

**கோப்பாய் வடக்கில் வராம்பற்றை என்னும் இடத்தில் 3 பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்குண்டு.**
**தொடர்பு : 0775219469**
**திருமதி அகிலன் சுதா**
**கந்தையா வீதி, சாவகச்சேரி.**

(68693)

## தவறிவிட்டது

செல்லையா நவரத்தினராசா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல.(522235199V)யும் வீ[illegible] அடையாள அட்டை இல. (0901012037) இரண்டும் கனகரத்தினம் வீதிக்கும் வைரவர் கோயில் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைத்துதவவும்.

**35, காட்டுக் கந்தோர் ஒழுங்கை,**
**சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.**

(68917)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீடம்

### ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்

### முழுநேர பத்திரிகையியல் டிப்ளோமாக் கற்கைநெறிக்கான அனுமதி (2006/2007)

ஓராண்டு முழுநேரப் பத்திரிகையியல் டிப்ளோமாக் கற்கைநெறி அனுமதிக்கு 2004, 2005, 2006 ஆம் ஆண்டுகளில் க.பொ.த (உயர்தர) தேர்வில் சித்தியடைந்ததுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதி பெற்றோரிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

அனுமதிக்கான தெரிவு முறை: எழுத்துத் தேர்வும்(எழுத்து ஆற்றல், அறிக்கையிடும் திறன், மொழியாற்றல், சமூக அறிவு) நேர்முகத்தேர்வும்.

கட்டணங்கள்:

| | |
|---|---|
| கற்கை நெறிக்கட்டணம் | ரூ. 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூ. 750.00 |
| நூலக வைப்புப் பணம் (மீளளிக்கத் தக்கது) | ரூ. 750.00 |
| நூலக பயன்பாடு | ரூ. 1,000.00 |
| மெத்தம் | ரூ. 22, 500.00 |

விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி அலுவலகத்திலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் ரூபா 100/= செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டினை சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் முதுநிலை உதவிப் பதிவாளர்/ கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 28.12.2007**

(சி/54709)

**பதிவாளர்.**

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை ஸ்ரீதரன்

அளவெட்டி வடக்கு, வேம்படி சோலையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை ஸ்ரீதரன் லண்டனில் 12.12. 2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்துரை - புனிதவதி தம்பதியரின் (இந்தியா) அன்புமகனும் குணரத்தினம் - ரஞ்சிதமலர் தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வியின் அன்புக் கணவரும் சாரசி, கபிலன், சாரங்கி ஆகியோரின் அன்புத்தந்தையும் குணவதி(இந்தியா), அருந்ததி(பிரான்ஸ்), சிவபாலன் (சுவிஸ்), ராகினி(அளவெட்டி), குமுதினி (லண்டன்), நந்தகுமார்(கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் வசந்தி, காலஞ்சென்ற கிருஷ்ணகுமார்(நீர்வேலி), உதயகுமார் (வவுனியா), செல்வகுமார்(கனடா), விஜயகுமாரி (வவுனியா), சிவபாலன்(அளவெட்டி), தேவமொழி(சுவிஸ்), பாஸ்கரன்(பாபு-லண்டன்), அருளம்பலம்(அளவெட்டி), சைலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். அன்னாரின் துக்க நினைவு அருளம்பலத்தின் இல்லத்தில்(கேணிக்கரை, அளவெட்டி) இன்று (14.12.2007) வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணிக்கரை,
அளவெட்டி.

தகவல்:
திருமதி அருளம்பலம் ராகினி
(சகோதரி)

### தர்மலிங்கம் சிறீஸ்கந்தராஜா

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் பாமன் தோட்டம், வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சிறீஸ்கந்தராஜா நேற்று(13.12.2007) வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னார் வல்வெட்டியைச் சேர்ந்த செல்வராணியின் அன்புக் கணவரும் ஷேயந்தனின்(உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி A/L 2008மாணவன்) அன்புத் தந்தையும் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த அமரர்கள் இ.தர்மலிங்கம்(முன்னாள் சுகாதார போதனாசிரியரும், பாடநூல் எழுத்தாளரும்)- பரமேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வனும் வல்வெட்டியைச் சேர்ந்த அமரர் செ.அருளானந்தம்-திருமதி அ.பானுமதி ஆகியோரின் அன்பு மருமகனும் திருமதிகள் டாக்டர் இந்திராணி சத்தியநாதன்(முன்னாள் பொறுப்பதிகாரி, கைதடி ஆயுள்வேதவைத் தியசாலை), லோகராணி பாலேந்திரன், விஜயராணி பத்மநாதன், தர்மராணி ஜெகநாதன், யோகராணி வன்னியசேகரம், சண்முகதாசன் (ஓய்வு பெற்ற முகாமையாளர், HNB Ltd), யுகேந்திரராசா, தயாபரன், நந்தகுமாரன்(ஆசிரியர் சென்.ஜோன்ஸ் கல்லூரி,யாழ்.), காலஞ்சென்ற முரளிதரன், திருமதி தயாவதி சபாநடேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சு.பாலேந்திரன் (ஓய்வு பெற்ற பொறியியலாளர், வடபிராந்திய போக்குவரத்துச் சபை, கோண்டாவில்), ம.பத்மநாதன்(ஓய்வுபெற்ற விளையாட்டுத்துறை பொறுப்பதிகாரி, யாழ்.பல்கலைக்கழகம்), ம.சத்தியநாதன், சி.வன்னியசேகரம், ம.ஜெகநாதன், யோகேஸ்வரி, யசோதரா, அனுசியா, திருமதி அமிர்தராணி பஞ்சரட்ணம் (கனடா), அ.மகேந்திரன்(பொறியியலாளர், பொட்சுவானா), ம.சபா நடேசன், திருமதி கிரிஜா மகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் இ.பஞ்சரட்ணத்தின் (கனடா) அன்புச் சகலனும் புன்னாலைக்கட்டுவன் வைத்தியகலாநிதி இ.நன் னித்தம்பி பத்மாவதி தம்பதிகள், செல்வி தேவி அம்பவாணர் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை) ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(13.12.2007) வியாழக்கிழமை வல்வெட்டியில் நடைபெற்றன.

பாமன்தோட்டம்,
வல்வெட்டி.
T.P: 0212263190

தகவல்:
**மனைவி, மகன்,**
**சகோதரன்(நந்தகுமாரன்)**
(ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி)

### மாரிமுத்து பரமேஸ்வரி



சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மத்தி, தேரியன் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாரிமுத்து பரமேஸ்வரி அவர்கள் நேற்று (13.12.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்துவின் அன்பு மனைவியும், சகுந்தலாதேவி, துரைசிங்கம் (ரெலிக்கொம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாலன், அமுதினி ஆகி யோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2007) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு சுழிபுரம் கிழக்கு இந்து மயானத்தில் இடம்பெறும்.

தகவல்:
மா.துரைசிங்கம் (ரெலிக்கொம்)

### செல்வி கமலாம்பிகை இராமுப்பிள்ளை

[ஓய்வுபெற்ற மொழிபெயர்ப்பாளர், சட்டமா அதிபர் திணைக்களம்]

கல்வயல், சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும்கொண்ட செல்வி கமலாம்பிகை இராமுப்பிள்ளை நேற்று (13.12.2007) வியாழக்கிழமை அதிகாலை கொழும்பில் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை-செல்லம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் அருணா சலம் ,கவிஞர் முருகையான், காலஞ்சென்ற சிவானந்தன் (இளைப்பாறிய கல்விப்பணிப்பாளர்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமாலை கொழும்பில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

426/38 (5/3)
V.T.V. தொடர்மாடி, கொழும்பு-13.
T.P- 011 2384878

(68942)

தகவல்:
அ.செல்வகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் வெட்டிய குழிகள் எங்கணும் விடுதலை அரசியலை விதைத்த மதியுரைஞர்

**தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த அரசியல் போராளியாக, மதியுரைஞராக, தத்துவாசிரியராக விளங்கி, தமிழர் போராட்ட வரலாற்றில் உயர்ந்து நின்றவர் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.**

**ஈழத்தமிழர்களின் வன்முறைப் போராட்டத்திற்கு நியாயம் காட்டி அரசியல் வடிவம் கொடுக்கும் பணியைத் தமது தோள்மீது சுமந்தவர் பாலா.**

**அவரது முதலாவது நினைவு தினம் இன்று டிசெம்பர் பதினான்காம் திகதியாகும். அவர் குறித்த ஒரு பார்வை இக்கட்டுரை.**

ஓராண்டுகாலம் நொடிப்பொழுதில் கரைந்து விட்டது.

இக்கால இடைவெளியில் எத்தனையோ மாற்றங்கள் கடுகதியில் நிகழ்ந்துவிட்டன.

இன்னொரு அரசியல் முகத்தையும் அண்மையில் இழந்து தவிக்கிறது தமிழர் தேசம்.

'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் தமிழின விடுதலைப் போராட்டப் பங்களிப்புக் குறித்து மீள் பார்வை கொள்வது அவரின் ஓராண்டு நினைவு நாளான இக்காலத்தில் பொருத்தப்பாடாக அமையும்.

விடுதலைப் பாதையில் தடையரண்களும் அழிவுக் கிருமிகளும் உட்புகுந்து வேரழிக்கச் சன்னதம் கொண்ட வேளையில், தனது மார்க்சிசப் பார்வை விரவிய அறிவாயுத்தைக் கையிலெடுத்துச் சமராடிய பெருமகன் இவர். எதிரியானவன், தலையைத் தடவியபடி 'முதுகிற்குப் பின்னால் வெட்டிய குழிகளுக்குள்' விடுதலை விதைகளை விதைத்து 'தனது அறிவாற்றலை உரமாக்கி' நீரிழிவு நோய் வாட்டிடும் போதும் அவ்விடுதலை விருட்சத்திற்கு நீர் பாய்ச்சிய அரசியல் சமராடி பாலா அண்ணர்.

பேச்சு மேடையில் விடுதலைப் புலிகளுக்கு வீசப்பட்ட சர்வதேச வலையை இலாவகமாக கழற்றி எறிந்த சாணக்கியமே சர்வதேசத்தை நோக்கிய சுயநிர்ணய உரிமை அறைகூவலிற்கு அத்திவாரமிட்டது.

தனியரசுக்கு மாற்றீடான மறுபக்க இணைவுச் சாத்தியங்களை சமஷ்டி என்றும், உள்ளக சுயநிர்ணயம் என்றும் நடைமுறையிலுள்ள கோட்பாடுகளை எடுத்துக் கூறியும் சிங்களத்திற்கு எதுவுமே புரியவில்லை.

இயல்பு வாழ்வு திரும்பவேண்டுமென மனித உரிமை பற்றிக் கூறியும் சர்வதேசத்திற்கு விளங்கவில்லை.

உலகத்து மக்களுக்கு ஏதோவொரு வகையில் தமிழர் தரப்பின் அரசியல் அபிலாஷைகள் பேச்சுத் தளத்தினூடாகக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்ற நம்பிக்கை உண்டு.

பயங்கரவாதமென்ற போர்வைக்குள் மூடி மறைக்கப்பட்டிருந்த விடுதலையின் ஒளியினை அவர்களுக்குப் புரிந்த அரசியல் கோட்பாட்டு மொழிமூலம் சர்வதேசப் பரப்பில் படரவிட்ட தேசத்தின் குரலின் ஆளுமை போற்றத்தக்கது.


### உலகத்திற்கு எடுத்துரைத்த பெரும் பணி

2002 பெப்ரவரி மாதம் வரை நிகழ்த்தப்பட்ட தமிழ்த் தேச விடுதலைப் போராட்ட பரிமாணத்தின் அரசியல் கருத்துநிலை வடிவத்தினை பேச்சுகள் ஊடாக உலகிற்கு எடுத்துரைக்கும் பெரும்பணி தமிழர் தலைமையில் தேசத்தின் குரலிற்கு வழங்கப்பட்டி ருந்தது.

**இதயச்சந்திரன்**

அரசியல் ஆளுமையும், தேச உருவாக்க சிந்தனையும் அற்ற வெறும் வன்முறைக் குழுவாக விடுதலைப் புலிகளைக் கணித்த அல்லது அவ்வாறு இருக்க வேண்டுமென்கிற கருத்தினைத் திணித்த சில பிராந்திய நலவாதிகளுக்கு அரசியல் ஆலோசகரின் முதிர்ச்சியான தேசிய விடுதலைக் கோட்பாட்டுக் கருத்துரைப்புகள் கசப்பாகவே இருந்திருக்கும்.

விடுதலைப் புலிகளை இராணுவ வழி மூலம் அழிப்பதே சரியானதென தற்போது கூறும் பேராசான் ஜீ.எல். பீரிஸ், தேசத்தின் குரலோடுதான் சர்வதேசம் அங்கீகரிக்கும் நாகரிக அரசியல் பற்றிப் பேசினார்.



### சர்வதேசத்தின் ஏமாற்றும் தந்திரத்தை உணர்ந்து கொண்டே பேச்சு

ஆழ்மனத்தில் இராணுவச் சிந்தனையும் நுனி நாக்கில் கற்றறிந்த ஏட்டுச் சுரக்காய்களும் ஊடாடுவதை அரசியல் வித்தகர் ஆறு

## போராட்டத்தின் பரிமாணத்தின் கருத்து நிலையை உலகிற்கு எடுத்துரைத்த தேசத்தின் குரல் பாலா

சுற்றுப் பேச்சிலும் உணர்ந்திருப்பார்.

திம்புவிலிருந்து ஜெனிவாவரை திலகர், யோகி, பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் போன்ற அரசியல் தளபதிகளை சிங்களத்தோடு பேசுமாறு அனுப்பியும் எதுவுமே அசைவுறாத நிலையில் இனி எந்த சிங்களத் தலைவர்களையும் நம்ப முடியாதென்கிற நிலைப்பாட்டினை 2007 ஆம் ஆண்டு மாவீரர் தின உரையில் தேசியத் தலைவர் முன் வைக்கிறார்.

பேசிப் பயனில்லை என்பதையும், பேசியே அம்பலமாக்க வேண்டுமென தேசத்தின் குரல் உணர்ந்தார்.

ஆயினும் பேச வலியுறுத்தும் சர்வதேச நாடுகளின் ஏமாற்றும் தந்திரத்தை உணர்ந்தவாறே பேசச் சென்றார்கள் விடுதலைப் புலிகள்.

35 வருடகாலப் போராட்ட வாழ்வில் ஐந்து வருடங்கள் சர்வதேச அரசியல் களத்திற்கு ஒதுக்கப்பட்டது.

திம்புவில் தமிழர் போராட்டத் தலைமைகளால் உறுதியாக முன்வைக்கப்பட்ட முதல் மூன்று கோட்பாடுகளும் தேச உருவாக்கத்தோடு பரிணாமமடைந்து தாயகம், தேசியம், தன்னாட்சி என்கிற உச்ச கருத்து நிலையை வந்தடைந்துள்ளன.

நியாயபூர்வமான கற்பனைக் கருத்துருவமாகக் கொள்ளப்பட்ட கோட்பாடுகள், விடுதலைப்புலிகளின் போராட்ட முன்னெடுப்போடும் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்ட தேச உட்கட்டுமானத்தோடும் யதார்த்த நிலையை எட்டியுள்ளது.

### அரசியல் கோட்பாட்டு வடிவத்தை உருவாக்கியவர்

இந்த முழுமைப் பரிமாணத்திற்கான அரசியல் கோட்பாடு வடிவத்தை உருவாக்குவதில் தேசத்தின் குரல் ஆற்றிய பங்களிப்பு மிகவும் காத்திரமானதொன்றாக அமைகிறது.

சமஷ்டி என்றாலே பதற்றமடையும் சிங்களத் தரப்பிற்கு 'உள்ளக சுயநிர்ணயம்' என்கிற மாற்றுப் பதத்தை முன்வைத்து தமிழர் தரப்பின் அபிலாஷைகளை விளக்க முயற்சித்தார்.

ஆனாலும் ஒற்றையாட்சி என்கிற குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்ட விரும்பும் சிங்களத்திற்கு சமஷ்டி, உள்ளக சுயநிர்ணயம், கூட்டாட்சி யாவும் அகராதியிலிந்து அகற்றப்படவேண்டிய சொற்பதங்களே.

ஒருலகக் கோட்பாட்டுச் சிந்தனையைக் கொண்ட நாடுகளில் நடைமுறையிலுள்ள ஆட்சியமைப்பு வடிவங்களான சமஷ்டி, உள்ளக நிர்ணயம், கூட்டாட்சி என்பனவற்றையே தேசத்தின் குரல் தனது பேச்சுகளில் தீர்விற்கான மாற்று வழிமுறைகளாக முன்வைத்தார். (05ஆம் பக்கம் பார்க்க)

---

## கடும் மழையும் காற்றும் தொடரும்; கடல் கொந்தளிப்பு நீடிக்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.14

வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள தாழமுக்க நிலையானது நேற்றுக்காலை 8 மணியளவில் திருகோணமலைக்கு 350 கி.மீற்றர் தொலைவில் மையம் கொண்டிருந்ததாக காலநிலை அவதான நிலையம் அறிவித்தது.

இது மேலும் வலுவடைந்து புயல்காற்றாக மாறி வடமேல் திசையில் நகரக்கூடும் என்றும் இதன் காரணமாக காங்கேசன்துறை தொடங்கி திருகோணமலை வரையான பகுதிகளில் கடும் காற்றுடன் விட்டு விட்டு மழைபெய்யும் என்றும் கடல்கொந்தளிப்புடன் காணப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் உட்பட வடக்கு - கிழக்கு பகுதிகளில் அடுத்த அறிவித்தல் வரும் வரை மீனவர்கள் கடலில் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் கடும் மழையும் கடலில் கொந்தளிப்பான கால நிலையும் அடுத்த 24 மணிநேரத்துக்கு நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## நயினாதீவுக் கிராமத்தைத் துரிதகதியில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.14

நயினாதீவுக் கிராமத்தை துரிதகதியில் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை நயினாதீவு சமூக, பொருளாதார, கல்வி, கலாசார, அபிவிருத்திச் சங்கம் மேற்கொள்ளவுள்ளது.

அடுத்த ஆண்டில் நயினாதீவு வைத்தியசாலைக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல், நிரந்தர வைத்தியர் நியமனம், சீரான மின்சார விநியோகம், போக்குவரத்து வசதிகள், நன்னீர்த் திட்டம், கல்விசார் நடவடிக்கைகள் போன்றவை மேற்கொள்ளப்படவுள்ளதாக சங்கத்தின் தலைவர் ப.க.பரமலிங்கம் தெரிவித்துள்ளார்.

பல வருடங்களாகத் திருத்தப்படாத அம்பாள் கோயில் துறைமுகத்தை உடனடியாகத் திருத்துவதற்கு யாழ்.அரச அதிபரிடமும் ஏனைய சம்பந்தப்பட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டுள்ளோம். அத்துடன் நயினாதீவில் 3 அலங்கார வளைவுகள் அமைப்பதற்கும் அம்பாள் ஆலய துறைமுகத் தொடக்கத்தில் நயினாதீவின் வரைபடத்தை வைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (202)

## குடாநாட்டு அரச அலுவலகங்களுக்கு 68 முகாமைத்துவ உதவியாளர்கள் நியமனம்

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ்.குடாநாட்டு அரச அலுவலகங்களில் கடமையாற்ற 68 முகாமைத்துவ உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

மத்திய அரசின் கீழ் உள்ள அரச திணைக்களங்களில் கடமையாற்றவென இவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவர்கள் இலங்கை ரீதியில் இடம் பெற்ற முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இந்த நியமனங்கள் பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை முழுவதற்குமான முகாமைத்துவ உதவியாளர்களாக ஆயிரத்து முந்நூறு பேர் கடந்த 10ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

குடாநாட்டில் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் திணைக்களங்களிலும் நியமனம் பெற்றுள்ளார்கள். (202-68)

## தொலைபேசியில் கப்பம் கேட்போர் கூறியவை வவுனியா, புத்தளம் வங்கிக் கணக்குகளே

### படையினரின் விசாரணை மூலம் தெரியவந்தது

யாழ்ப்பாணம்,டிசெ.14

தொலைபேசி மூலம் அச்சுறுத்தி கப்பம் கோருவோர் யாழ்.பிரதேச மக்களுக்குத் தெரிவித்த வங்கிக் கணக்குகள் வவுனியா மற்றும் புத்தளம் பகுதிகளைச் சேர்ந்தவர்களுடையவை. படையினர் மேற்கொண்ட விசாரணைகளின் பிரகாரம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

பாதுகாப்புப் படைகளின் பலாலித் தலைமையகம் இதனை அறிவித்துள்ளது. இதுதொடர்பாக விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது-

பொதுமக்களை தொலைபேசி மூலம் அச்சுறுத்தி மக்களிடமிருந்து பணத்தைக் கொள்ளையிட சில சதிகாரர்கள் திட்டமிட்டுச் செயற்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆதலால் அவர்களின் சூழ்ச்சிகளுக்கு அகப்பட்டு உங்கள் உடைமைகளை இழக்க வேண்டாமென்றும் இது பயங்கரவாதத்தால் பீடிக்கப்பட்டுள்ள மக்களின் மன நிலையை அறிந்து குழம்பிய குட்டையில் இலாபமடைய முற்படும் மனித நேய மற்ற இழிவானவர்களின் செயற்பாடுகளின் வெளிப்பாடு என்பதனையும் கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

வெளியிடங்களில் இருந்து உங்கள் பணத்தைக் கொள்ளையிட முற்படுவோருக்கு அஞ்சாது அவர்கள் வழங்கும் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதன் படி பாதுகாப்புத் தரப்பினருக்குத் தொடர்ந்தும் வழங்குவதன் மூலம் உங்கள் உடைமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கும் சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்வதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதனை தெரிவிப்பதோடு எந்தப் பிரதேசத்தில் இருந்தாலும் அவர்கள் சட்டத்திலிருந்தும் தப்பிச் செல்ல முடியாது. அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்று உள்ளது. (அ)




## புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் பிரதேசங்களில் உருளைக்கிழங்கு உற்பத்தியில் விவசாயிகள் தீவிரம்

யாழ்ப்பாணம்,டிசெ.14

தனியார் வர்த்தகர்களால் எடுத்து வரப்பட்ட விதை உருளைக்கிழங்குகளைக் கொள்முதல் செய்து புன்னாலைக் கட்டுவன், குப்பிளான் ஆகிய பிரதேசங்களின் விவசாயிகள் உருளைக் கிழங்கு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

குடாநாட்டு விவசாயிகளும் விவசாய சம்மேளனத்தினரும் தமக்கு விதை உருளைக்கிழங்குகளைப் பெற்றுத் தருமாறு கமத்தொழில் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும் அவற்றின் விலையில் காணப்பட்ட இழுபறியால் அத[illegible] கொடுப்பதில் திணைக்களத்தினர் தயக்கம் காட்டினர்.

இதையடுத்து தற்போது தனியார் வர்த்தகர்கள் சுமார் இருநூறு பெட்டி விதை உருளைக்கிழங்குகளை எடுத்து வந்துள்ளனர். இவற்றையே தற்போது விவசாயிகள் பெற்று நடுகையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே 50 கிலோ கொண்ட பெட்டி விதை கிழங்கு 15 ஆயிரத்து 500 ரூபா வரை விலையிடப்பட்டிருந்தது. இதனால் அவற்றைக் கொள்வனவு செய்வதில் விவசாயிகள் தயக்கம் காட்டி வந்தனர்.

கொழும்பில் இருந்து தனியார் எடுத்து வந்த விதை கிழங்கை 14 ஆயிரம் ரூபா விலைக்கு விநியோகமானதைத் தொடர்ந்து இப்பகுதியில் உருளைக்கிழங்கு நாற்று நடும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளார்கள். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கென பெருங்கல்லூரி அமைத்து பெருமை கொண்டவர் பெரியார் இராமநாதவள்ளல்



ஈழத்திருநாட்டில் உன்னதமான பணியாற்றி உலகு உள்ளவரை நினைவு கூரும் தகுதி பெற்றவர் ஒப்புரவாளர் சேர்பொன்னம்பலம் இராம நாதன் அவர்கள்.

காலத்துக்கு ஒவ்வக்கூடிய காரியங் களை ஆற்றிய இப்பெருந்தகையின் பெருமை சொல்லிலடங்கா. எம் மண் செய்த மாதவத்தால் 16.04.1851ஆம் திகதி இப்புண்ணிய பூமியில் ஸ்ரீமான் பொன்னம்பலம் அவர்களுக்கும் செல்லாச்சி அம்மையார் அவர்களுக்கும் புதல்வனாகப் பிறந்தார். சிறுபராயம் முதல் கல்வியிலும் கடவுள் பக்தியிலும் சமூக உணர்விலும் ஆர்வங்கொண்டு விளங்கினார். மிக இளம் பராயத்தில் சட்டத்துறையில் பயின்று சிறந்த கல்விமானாக விளங்கினார். ஆன்மீகச் சிந்தனையோடு இறையியலை ஆராயும் ஆர்வம் இவரிடம் இயல்பாகவே இருந்தது.

1873 இல் பிரபல நியாயவாதியாக விளங்கிய இவர் 1879 ஆம் ஆண்டு சட்ட நிருபண சபை உறுப்பினரானார். சட்ட சபையில் இந்துக்களுக்குரிய தேச வழமைச் சட்டத்தை நிலை நாட்டுவதிலும் ஏனைய மதத்தவர்களுக்குரிய உரிமையை நிலைநாட்டுவதிலும் முன்நின்று உழைத்தார். 52 ஆண்டுகள் சட்டநிருபண சபையில் சேவையாற்றிய இராமநாதன் இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கிய தலைவர்களில் ஒருவராகக் கருதப்படுகின்றார்.

இவர் சமூகத்துக்கு ஆற்றிய சேவைகளில் கல்விப் பணி மிகவும் உன்னதமானது. இவரது ஆன்மீகக் குருவாகிய தஞ்சாவூர் அருள் பரமானந்த சுவாமிகள், நல்லூர் செல்லப்பா சுவாமிகள் இவரது வாழ்வை அறப்பணிகளின் திசைக்கு மாற்றினர். அன்னவரின் வாழ்வில் இணைந்து கொண்ட லீலாவதி இராமநாதன் அம்மையார் அவருக்கு பெரும் பக்கத் துணையாக விளங்கினார். இதன் பயனாக மருதனார் மடத்தில் 25 ஏக்கர் நிலத்தில் மிகப் பிரமாண்டமான கல்லூரி உருவாகியது. 03.06.1910 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு ஆத்மீகப் பெரியவர்கள் முன்னிலையில் இராமநாதன் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அவ்வேளை எழுந்தருளிய செல்லப்பா சுவாமிகள் "கப்பல் போல் பாடசாலை கட்டி கன்னியருக்கு கல்வி கொடு" என ஆசீர்வதித்தார். அதன் விளைவாக இந்தியாவில் இருந்து கப்பலில் கட்டடக்கலைஞர்கள் அழைக்கப்பட்டு இரவு பகலாக இப்பாடசாலை நிர்மாணப் பணி நடைபெற்றது. 1913 ஆம் ஆண்டு சகல வசதிகளும் கொண்ட இந்துப் பெண்களுக்கான ஈடு இணையற்ற கல்லூரி திறந்து வைக்கப்பட்டது. சுதேசிகளின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை நிலைநாட்டுவதற்கு இப்பாடசாலையின் நெறிமுறைகளைத் தானே வகுத்தார். இந்தியாவிலிருந்து பல அறிஞர்களை அழைத்து வந்து இராமநாதன் கல்லூரியில் குடியேற்றி நிறைவான கல்வியை வழங்க வழிசெய்தார். இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்பதற்கு குடாநாட்டு மாணவிகள் மட்டுமன்றி இலங்கையில் பல பாகங்களிலிருந்தும் இக்கல்லூரியை நோக்கி திரண்டனர். கடல் கடந்து மலேஷியாவில் வாழ்ந்த குடும்பத்தவர்கள் இராமநாதன் கல்லூரியின் சிறப்பை அறிந்து கல்லூரி விடுதிச்சாலையில் தம்பிள்ளைகளைச் சேர்த்தனர். சுமார் 400 பிள்ளைகளுடன் விடுதிச்சாலை ஆறு இல்லங்களாகப் பிரிந்து செயற்பட்டது. விடுதிச்சாலையில் உள்ள மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பணியாளர்களுக்கும் உணவு வசதியை மேற்கொள்வதற்காக கிளிநொச்சியில் பாடசாலையின் பெயரால் விவசாயப் பண்ணை உருவாக்கப்பட்டது. அரிசி, பால், பழம், மரக்கறி அனைத்தும் கிளிநொச்சிக் கமத்திலிருந்து வாரந்தோறும் கல்லூரிக்கு வந்து சேரும். இந்துக் குருகுலக் கல்விமுறை போன்ற கல்வி முறையே இராமநாதன் கல்லூரியில் உருவாக்கப்பட்டது. பாடசாலை வளாகத்தில் பெண்கள் விவசாயம் செய்வதற்கு சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டது. உடல், உள ஆரோக்கியத்திற்கான தியானப்பயிற்சி முதல் விளையாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. கல்லூரி வளாகம் முழுவதும் பயன் தரு மரங்களும் மணம் வீசும் மலர்ச்செடிகளும் வளர்க்கப்பட்டன. ஆஸ்திரேலியாவில் பிறந்த லேடிஇராமநாதன் அங்கு தான் கல்வி கற்ற பாடசாலையின் தோற்றத்தையும் அழகையும் இங்கு நிலைநாட்டுவதற்கு எடுத்த முயற்சியின் விளைவு இராமநாதன் கல்லூரியை விசாலமாக்கியது எனலாம். கல்லூரி மாணவர் தொகை அதிகரிக்க ஆசிரியர்களின் தேவையும் அதிகரித்தது. இந்நிலையிலேயே கல்லூரி வளாகத்தில் பெண் ஆசிரியர்களுக்கான சைவாசிரி கலாசாலை உருவாக்கப்பட்டது. இவர்களுக்கு விரிவுரை நடத்துவதற்காக இந்தியாவிலிருந்து மேலும் அறிஞர்கள் வரவழைக்கப்பட்டனர். இராமநாதன் கல்லூரி சர்வகலாசாலை போல் திகழ்ந்தது.

> *சட்டத்துறை, அரசியல் துறைகளில் மட்டுமன்றி கல்வித்துறையில் சேர்பொன்.இராமநாதன் ஆற்றிய பணிகளே அவர் புகழை என்றென்றும் உலகுக்கு எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றன. மருதனார்மடத்தில் அவர் கட்டியெழுப்பிய பெண்கள் கல்லூரியும் திருநெல்வேலியில் உள்ள பரமேஸ்வராக் கல்லூரியும் (இன்று யாழ்.பல்கலைக்கழகம்) தமிழர் சமுதாயத்திற்கு அப்பெருமகன் ஆற்றிய கல்விப் பணிக்கு சான்றாக விளங்குகின்றன. இன்று சேர்பொன் .இராமநாதன் அவர்களின்குருபூசைதினம்.*

பலரது வேண்டுதலுக்கமைய திருநெல்வேலியில் 1921ஆம் ஆண்டு ஆண்களின் கல்விக்காக வள்ளல் அவர்கள் பரமேஸ்வராக் கல்லூரியைக் கட்டுவித்தார். இரு கல்லூரிகளும் யாழ்ப்பாணத்தவர்களின் இரு கண்களாகப் பிரகாசித்தன. ஆங்கிலத்துறை சார்ந்த அறிஞர்களும் இரு கல்லூரிகளிலும் சிறப்பாகப் போதித்தனர். மரபுக் கல்வியைக் காப்பதற்கு இரு கல்லூரிகளிலும் சிறப்பு ஏற்பாட்டினை இராமநாத வள்ளல் செய்திருந்தார். தமிழர்களின் கல்விக்கு இரு கல்லூரிகளும் ஒப்பற்ற பங்களிப்பை நல்கின. இராமநாதன் கல்லூரியின் பிரசவிப்பே ஈழத்து இந்துப் பெண் கல்விப் பாரம்பரியத்தின் பரிணாம வளர்ச்சி எனலாம். 30.11.1930 அன்று சேர் பொன் இராமநாதனின் ஆத்மா பிரியும் வரை இரண்டு கல்லூரிகளின் கல்விப் பணிக்காக அர்ப்பணிப்போடு அவர் ஆற்றிய தொண்டுகள் என்றும் மறக்க முடியாதவை.

திருமதி கோனேஸ்வரி இராமச்சந்திரன்
பழைய மாணவி,
ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.


## வாழ்த்துகின்றோம்



இலட்சுமணன் துஷ்யந்தி
HIGHER NATIONAL DIPLOMA IN MANAGEMENT (HNDA)
2004 Decemper

23.11.2007 கொழும்பு பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற செல்வி துஷ்யந்தி இலட்சுமணனை மேலும் பல பட்டங்கள் பெற வேண்டும் என அன்ரி, சித்தப்பா, அங்கிள் ஆகியோர் மனமார வாழ்த்துகிறார்கள்.

க.செல்வநாயகம் *(சித்தப்பா)*
இ.செல்வராசா *(அங்கிள்)*

*நாவற்குழி*
*பாடசாலை வீதி, கைதடி.*
(68911)


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,டிசெ.14

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை விநாயகர் விரத இறுதி தினத்தை முன்னிட்டு விசேட பூசை, அபிஷேகம் மற்றும் பெருங்கதை படிப்பு என்பன நடைபெறும்.

அத்துடன் நண்பகல் அன்னதானம் வழங்கப்படும்.

(202-224)

* * *

நீர்வேலி,டிசெ.14

கோப்பாய் வடக்கு இலுப்பையடி விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் பெருங்கதை படிப்பு இறுதிநாள் நாளை சனிக்கிழமையுடன் பூர்த்தியாகும்.

அன்றைய தினம் விசேட அபிஷேகம் மற்றும் லட்சார்ச்சனை, ஹோமம் என்பன இடம்பெறும். (202-224)

* * *

யாழ்ப்பாணம் அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் ஆலயத் தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்குப் பஞ்சமுக பிள்ளையாருக்கு பஞ்சமுக அர்ச்சனையும் பிற்பகல் 4 மணிக்கு கஜமுகாசூர சங்காரமும் நடைபெறவுள்ளன.

* * *

இந்து ஆலயங்களில் பிள்ளையார் பெருங்கதை படிப்பு இன்றுடன் பூர்த்தியடைகிறது.

சாவகச்சேரி கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோவிலில் பெருங்கதை பூர்த்தியையொட்டி இன்று கஜமுகாசுரவதம் உற்சவம் நடைபெறும்.

(207)


## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**மாணிக்கர் சின்னத்துரை**
*(ஓய்வு பெற்ற உப அதிபர்)*

*மலர்வு*
*02-04-1936*

*உதிர்வு*
*09-12-2002*

**திதி: 14.12.2007**

**அன்பாக எமை வளர்த்து - நாம்**
**அறிவுபெற வழியமைத்த அப்பா!**
**அழியாத உங்கள் நினைவுகள் - நெஞ்சில்**
**அணையாத தீபமாய் என்றும் ஒளிரும்.**

*சிவகிரி,*
*கேணியடி,*
*குப்பிளான், ஏழாலை*
(67925)

**அன்பு மனைவி,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**



## வாடிக்கையாளர்களே...!

## அன்பர்களே...!

## புத்தாண்டை முன்னிட்டு மலிவு விற்பனை

- வீட்டுப் பாவனைக்கான தளபாடங்கள்
- அலுவலகப் பாவனைக்குரிய தளபாடங்கள்
- அனைத்து விதமான மெத்தை வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

வெளிநாட்டிற்கான பொதிகள், ஆவணங்கள் குறைந்த கட்டணத்தில் குறுகிய நாள்களில் உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும்.

தொடர்புகளுக்கு:

T.P.:
0773583879
0115620094.

**ஏசியன் தளபாட நிலையம்,**
133, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலையம் அருகில்)
யாழ்ப்பாணம்.



## ஆறாத் துயரில் ஆண்டொன்று



ஜேக்கப்
சேபஸ்ரியாம்பிள்ளை

*மனம் நெகிழ*
*14.05.2006*



அருட்சகோதரி
அசும்ரினா

*மனம் நெகிழ*
*16.11.2006*



கிறிஸ்ரி
சுகந்தநாதன்

*மனம் நெகிழ*
*14.12.2006*
கிளை முகாமையாளர்
M.P.C.S. மானிப்பாய்.

*நாங்கள் காண்பவற்றையல்ல காணாதவற்றை*
*நோக்கியே வாழ்கிறோம். காண்பவை நிலையற்றவை*
*காணாதவை என்றும் நிலைத்திருப்பவை*

*2 கொரி 4:18*

**எங்கள் குலதெய்வங்கள் நீங்கள்**
**மூவரும் வருடமொன்றில் எம்மைப் பிரிந்ததேன்**
**நீங்கள் போய் ஆண்டொன்றானாலும்**
**எம் கண்களில் நீர்த்துளிகள் காயாது காயாது!**
**அழுதழுதும் மனத்துயரம் ஆறாது ஆறாது!**

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் நாளை (15.12.2007) சனிக்கிழமை காலை 6 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

*டேவிற் வீதி,*
*மானிப்பாய்.*
(68927)

**குடும்பத்தினர்.**



# M.A.,M.Com.,MBA, M.Sc.

## காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)

- பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

M.A இல் வரலாறு, அரசியல் விஞ்ஞானம், பொருளியல், ஆங்கிலம், தமிழ், பொதுநிர்வாகம், சமூகவியல்,சமயமும் தத்துவமும், LABOUR MANAGEMENT, COMMUNICATION AND JOURNALISM ஆகிய பாடங்களில் ஒன்றை தெரிவு செய்யமுடியும்.

M.Com இல் BANKING, COMMERCE, COOPERATIVE MANAGEMENT ஆகிய பாடங்களில் ஒன்றைத் தெரிவு செய்யலாம்.

P.G.DIPLOMA ஒரு வருட கற்கை நெறியாக பின்வரும் பாடங்களில் ஒன்றை தெரிவு செய்யலாம். JOURNALISM AND MASS COMMUNICATION, PUBLIC RELATIONS MANAGEMENT, MANAGEMENT,COMPUTER APPLICATION,MARKETING MANGEMENT, HOSPITAL MANGEMENT, ENTREPRENEURSHIP DEVELOPMENT,SCHOOL ADMINISTRATION, N.G.O MANAGEMENT;

குறிப்பு:-

1. மார்கழிமாத பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சைகள் ஆரம்பம் 26.12.2007 9மணி
2. பரீட்சைகள் யாவும் கல்லூரிப் பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.
3. பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகளை 17.12.2007ல் இருந்து அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

*யாழ் இணைப்பாளர்கள்*
**காமராசர் பல்கலைக்கழகம்**
T.P NO 2228148, 2223208

(68892)

புதிய உயர் கல்லூரி
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தமிழ்த் தலைவரையாவது அரசு கொன்றதா? கூட்டமைப்பினரிடம் கேள்வி எழுப்பினார் டக்ளஸ்!



கொழும்பு, டிசெ.14

இதுவரை கொல்லப்பட்ட தமிழ்த் தலைவர்களில் ஒருவரையா வது அரச தரப்பு கொன்றொழித்திருக்கின்றதா? அப்படி அரசுத் தரப்பினால் கொல்லப்பட்ட ஒரு தமிழ்த் தலைவரின் பெயரை உங்களால் கூறமுடியுமா?

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களைப் பார்த்து நாடாளுமன்றில் சவால் விடுத்தார் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா.'உங்களால் இக் கேள்விக்குப் பதில் தர முடியாது. ஏனென்றால், எல்லாத் தமிழ்த் தலைவர் களையும் புலித் தலைமையே கொன்றொழித்தது.'' - என்றும் கடுமையாகச் சாடினார் அவர்.தமது சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதம் புதன்கிழமை நாடாளுமன்றில் நடைபெற்றது. கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

**அங்கு உரையாற்றும் பே ாதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்**

**அமைச்சர் மேலும் கூறியதாவது:**

தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சமாதானத்தின் குரலாக ஒலிக்கும் ஈ.பி.டி.பியின் சார்பாகவும், இலங்கைத் தீவில் வாழுகின்ற அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இந்த அரசின் அமைச்சராகவும் இந்தச் சபையில் நான் உரையாற்ற வந்திருக்கின்றேன்.

தமிழ்பேசும் மக்களின் உரிமைக்கு குரல் கொடுக்கவும், அவர்கள் சார்பில் நின்று, சிங்கள, முஸ்லிம் சகோதர மக்கள் சமூகங்களினதும் மற்றும் இந்த அரசினதும் உறவுக்கு கரம் கொடுக்கவும் எண்ணியே நான் இந்த அரசில் அமைச்சராகப் பங்கெடுத்து வருகின்றேன்.

தமிழ் பேசும் மக்களின் பெயரால் அழிவு யுத்தம் நடத்த எண்ணி இன்னமும் புலித் தலைமை ஏந்தி வைத்திருக்கும் துப்பாக்கிக் குழாய்களில் இருந்து புறப்படும் குண்டுகளால் சிந்த வைக்கப்படும் குருதி கொண்டு, சமாதானத்தை ஒருபோதும் இந்த மண்ணில் எழுதிவிட முடியாது.

எம்மிடம் இருப்பது -

**சாத்தியமான வழிகளை உறுதியுடன் முன்னெடுக்கின்றோம்**

சமாதானத்தை உருவாக்கிக் காட்டுவோம் என்ற நம்பிக்கை. நாங்கள் நீதியின் பக்கம் - மக்கள் எம் பக்கம் என்ற பலம்.

அமைதிக்கும், அரசியல் உரிமைக்கும் , இன ஐக்கியத்திற்கும், இன சமத்துவத்திற்கும், ஜனநாயகத்திற்கும் எதிராகத் திருப்பப்படும் திசை தெரியாத குருட்டு துப்பாக்கிகளை எதிர்த்து நிற்கும் துணிச்சல். இவைகளே எம்மிடம இருக்கின்றன. ஆகவேதான் எமது இலட்சியப் பயணத்தை நாம் உறுதியுடன் நடைமுறைச்,சாத்தியமான வழிமுறையில் முன்னெடுத்து வருகின்றோம். நாம் எழுச்சியான கோஷங்களையும் நடைமுறைக்கு உதவாத கோரிக்கைகளையும் முன்வைத்து நாடாளுமன்றத்தின் ஊடாகவும், ஊடகங்களுக்கூடாகவும் எமது மக்களைச் சூடேற்றி விட்டு ஓடி ஒளித்துக்கொள்ளும் சுயலாப அரசியல்வாதிகள் அல்லர். துப்பாக்கி முழக்கங்களுக்கும், போர்ப் பிரகடனங்களுக்கும் எழுச்சிப் பேச்சுகளுக்கும் எமது மக்களை அவலங்களுக்குள் சிறை வைத்திருக்கின்றன.இந்த அவலங்களைத் தீர்ப்பதற்குத் தமிழ் பேசும் மக்களின் பெயரால் தமக்குத் தாமே திருட்டு வாக்கப் போட்டு இந்தச் சபைக்கு வந்திருப்பவர்கள் தயாரில்லை.

எமது மக்கள் அவலங்களைச் சந்திக்க வேண்டும் என்றும், பட்டினிச் சாவில் நலிந்து பேகவேண்டும் என்றும் மட்டும்தான் புலித் தலைமை விரும்புகின்றது. அதற்கு ஊடாக நலிந்து போன எமது மக்களைத் தமது யுத்த வெறி நோக்கி இழுத்துச் செல்லவே புலித் தலைமை விரும்புகின்றது.

இந்த நிலையில் எமது இலக்கு நோக்கிய




பயணத்தில் மக்களின் அன்றாட அவலங்களையும் தீர்ப்பதற்காகவே நான் அமைச்சுப் பதவி எடுத்து இந்த அரசில் அங்கம் வகித்து வருகின்றேன்.

மக்களின் கருத்துக்களை அறியாமல், மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் முன்னெடுக்கப்படுகின்ற எந்தப் போராட்டமும் வெற்றியடைந்ததாகச் சரித்திரம் இல்லை.

'கும்பிகூழுக்கு அழுகின்றதாம்! கொண்டை பூவிற்கு அழுகின்றதாம்!' என்பது போல் எமது மக்கள் அவலங்களில் இருந்து விடுபட வேண்டும் என்றும், அமைதிக்காகவும் அரசியலுரிமைச் சுதந்திரத்திற்காகவும் எதிர்பார்த்துக் காத்திருக்கையில் புலித்தலைமையும், அவர்களது எடுபிடிகளான தரகுக் கூட்டமைப்பினரும் கற்பனைக்கு எட்டாத தூரத்தில் நின்று சாம்ராச்சியக் கனவு கண்டு கொண்டிருக்கின்றனர்.

தமிழ் பேசும் மக்க ளின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்வரை பிரபாகரனால் என்னைக் கொன்றொழித்து விட முடியாது.

ஆகவே, தமிழ் பேசும் மக்களுக்காகவே ஜனநாயக வழியிலும், ஆயுதப் போராட்ட வழியிலும் உழைத்திருந்த தமிழ்த் தலைவர்களைக் கொன்றொழித்த பிரபாகரன் யாருக்காக யுத்தம் நடத்துகின்றார் என்று அடுத்த கேள்வியை உங்களிடம் கேட்கின்றேன்.

புலித்தலைவர் பிரபாகரனால் தனது பங்கர் மாளிகைக்குள் இருந்து வெளியே வந்து சாதாரண பொதுமக்களுடன் பேசிப்பார்க்க முடியுமா என்று கேட்கின்றேன். அவர்களது கருத்துக்களைச் சரிவர அறிந்து கொள்ள முடியுமா என்று நான் கேட்கின்றேன்.

'உங்களுக்கு யுத்தம் வேண்டுமா? சமாதானம் வேண்டுமா?' என்று தமிழ் பேசும் மக்களிடம் ஒருமுறை கேட்டுப் பார்க்கட்டும். ஆனால் இது நடக்கப்போவதில்லை, பிரபாகரன் தனது பங்கர் மாளிகையை விட்டுத் தானாக வெளியே ஒருபோதும் வரப்போவதும் இல்லை. உப்புக்கடல் பாற்கடலாக மாறி, கிழகில் உதிக்கும் சூரியன் மேற்கில் உதித்தாலும் பிரபாகரன் மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கவும் போவதில்லை.

தமிழ் பேசும் மக்களின் விருப்பம் அமைதியும், சமாதானமும், அரசியலுரிமைச் சுதந்திரமும்.

ஆனாலும் மக்ளின் விருப்பங்களுக்கு மாறாகப் புலித்தலைமை யுத்தம் நடத்திக் கொண்டிருக்கின்றது. அப்பாவி மக்களான அடுத்தவன் பிள்ளைகளை அர்த்தமற்ற போருக்கு பலிகொடுத்து வருகின்றது.

புலித்தலைமையின் யுத்தகளத்தில் இருந்து அப்பாவி இளைஞர், யுவதிகளை மீட்டெடுக்க் வேண்டும். இவைகளே எங்களது விருப்பங்கள்.ஆகவே புலித்தலைமையைக் காரணமாக வைத்து அரசியல் தீர்வு முயற்சிகளைப் பின் தள்ளி விடக்கூடாது. அனைத்து அரசியல் கட்சிகளும் இன்று ஏற்றுக்கொள்ள முடிந்த வடக்கு - கிழக்கு் மாகாணங்களுக்கான இடைக்கால நிர்வாக சபையினை முதல் கட்டமாக ஏற்படுத்தி இதில் இருந்து சமாதானத்தையும் அமைதி யையும் நோக்கி இலங்கைத் தீவு விரைவாக முன்நோக்கிச் செல்லவேண்டும்.தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது எமது மக்களின் நம்பிக்கை. நாம் ஜனநாயக வழிக்கு வந்து இருபது வருடங்கள் கழிந்தோடி விட்டன.

இந்த இருபது வருடங்கள் கழிந்த நிலையில் பிறக்கின்ற ஆண்டு சமாதானத்திற்கான நம்பிக்கை தரும் ஆண்டாகப் பிறக்கவேண்டும் என தமிழ் பேசும் மக்களின் சார்பாக நான் மனிதாபிமான வேண்டுகோள் விடுக்கின்றேன். - என்றார். (சி)

# கோத்தபாயவின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் பிள்ளையான் குழுவினரே மூவரையும் கடத்தினர்

## சபையில் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ.14

கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் உறவினர்களைக் கடத்திப் பணயமாகவைத்துக்கொண்டு வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்கும்படி அச்சுறுத்துகின்றனர்.

கடந்த 18ஆம் திகதி இவ்வாறு ஒருவ்ரைக் கடத்திய பிள்ளையான் அணியினர் இரண்டாவது தடவையாகவும் இப்போது எமது உறுப்பினர்கள் மூவரின் உறவினர்களைக் கடத்திச் சென்றுள்ளனர்.

இவர்களைப் பாதுகாக்க வேண்டிய அரசு 'பிள்ளையான்' துணைப்படையினருக்கு ஆதரவளிக்கின்றது.

- இப்படித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் புதனன்று நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தினார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் பிள்ளையான் அணியினரின் துரோகச் செயல்களைத் தடுத்து நிறுத்த நாடாளுமன்றம் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தினார்.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுள்ள ஆட்கடல்தல்கள் தொடர்பாக சுரேஷ் பிரேமச்சந்திரன் சபையில் கவனஈர்ப்புப் பிரேரணை ஒன்றை நேற்று முன்தினம் முன்வைத்தார்.

கடந்த முறை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபையின் மருமகனைக் கடத்தி வைத்துக் கொண்டு கனகசபை எம்.பியை இரண்டாவது வாசிப்பின் போது வாக்களிக்க விடாமல் தடுத்தனர்.

இவ்வாறு கடத்தியவர்கள் அரச இராணுவத்தினதும், அரசினதும் பாதுகாப்பில் இயக்கும் பிள்ளையான் அணியினர் என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

கடந்த முறை அவ்வாறு கடத்திச் சென்றவர்கள் கனகசபை எம்.பி.யின் மருமகனை வாக்கெடுப்பு நடந்த பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், கடத்தல்காரர்களான பிள்ளையான் அணியினருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இப்பொழுதுஇரண்டாவது தடவையாக அதே பிள்ளையான் அணியினரால் மட்டக்களப்பு மாவட்ட கூட்டமைப்பு உறுப்பினர்களாக தங்கேஸ்வரியின் செயலாளர் நாகலிங்கம் அன்புமணி (72 வயது), அரியநேந்திரனின் சகோதரர் ஸ்ரீஸ்கந்தசெய, ஜெயானந்த மூர்த்தியின் மருமகன் அருணாசலம் சிவபாலன் ஆகிய மூவரும் கடத்தப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்டவர்கள் அரசடியில் உள்ள பிள்ளையான் அணி அலுவலகத்திற்கே கொண்டு செல்லப்பட்டுள்ளனர். மேற்குறிப்பிட்ட மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்வரும் 14ஆம் திகதி வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்தால் கடத்தப்பட்ட அவர்களது உறவினர்கள் சுட்டுக் கொல்லப்படுவர் என அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.பிள்ளையான் அணியினர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபயவின் அனு சரணையுடன் இயங்குகின்றனர். எனவே, கடத்தல்களுக்கும், அரசுக்கும் தொடர்பு உண்டு என சந்தேகம் கொள்கிறோம்.

நாடாளுமன்ற உறுப்பினர்களது பாதுகாப்பையும், சிறப்புரிமைகளையும் பாதுகாக்க வேண்டியது சபாநாயகரின் கடமை என்பதால் உடனடியாக இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டவர்களை விடுதலை செய்யவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக வாக்களிக்கவும் உத்தரவாதம் பெற்றுத் தருமாறு சபாநாயகரைக் கோரு்கிறோம். - என சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தினார். (சி)

# சிங்களம் வெட்டிய.....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது குறித்து பேசப்படலாமென்பதை முன்னிலைப்படுத்தவோ அல்லது தாம் கடைப்பிடிக்கும் அரசியல் முறைமைகளை நியாயப்படுத்தவோ அனுசரணை வகித்த எவரும் முயலவில்லை.

சிங்களம் விரும்பும் அரசியல் தீர்வோடு, சமரசம் கொள்ளும் நிர்ப்பந்தங்களையே தமிழர் தலைமை மீது திணிப்பதற்கு சர்வதேசம் விரும்பியது.

இதனடிப்படையிலேயே இந்தியா ஏமாற்றியது போன்று சர்வதேசமும் இன்று எம்மை ஏமாற்றி விட்டதென தேசியத் தலைவர் தனது விசனத்தை மாவீரர் தின உரையில் தெரிவிக்கிறார்.

**கொசோவோவின் பிரகடனம் அவதானிக்கப்படுகிறது**

இன்றைய நிலையில் கொசோவாவின் சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்திற்கு சர்வ் தேசம் மேற்கொள்ளப் போகும் இராஜதந்திர நகர்வுகளையும் அணுகுமுறைகளையும் அதே போன்று போராடும் சக்திகள் அனைத்தும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

அரசுகளிற்கிடையே ஏற்படும் யுத்தங்களும் அரசொன்றினை எதிர்த்து தமது சுயநிர்ணய உரிமைக்காக முன்னெடுக்கப்படும் மக்கள் யுத்தங்களும் சர்வதேச மட்டத்தில் பல பிராந்திய முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன.

இம்முரண்நிலையைப் பகுப்பாய்வு செய்து சர்வதேச நகர்வுகளுக்கு ஏற்றவாறு எமது தேச விடுதலையை வென்றெடுக்கக்கூடிய இராஜதந்திர வழிமுறையினை வகுக்கக்கூடிய வல்லாண்மை தேசத்தின் குரலிற்கு உண்டு.

அவர் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் தமிழ்த் தேசிய அரசியல் ஆளுமையில் அண்ணன் ஆற்றிய கனதியான பங்களிப்பும், தேசியத் தலைவனின் ஆழமான பிரபஞ்சம் பற்றிய புரிதலும், நேர்த்தியான பாதையில் எமது விடுதலைப் போராட்டத்தை வழிநடத்தியே தீரும்.

**தமிழின வரலாறு பாலாவின் பெயரைச் சுமக்கும்**

அப்பாதையை சீராகச் செப்பனிட்டு, விடுதலை வேள்வித் தீயில் தன்னை இணைத்து தேசத்தின் குரலாகவும் அரசியல் முகவரியாகவும் திகழ்ந்த அன்ரன் பாலசிங்கம் அவர்களைத் தமிழின வரலாறு நிச்சயம் சுமந்து செல்லும்.

*வாழ்வதற்காகப் போராடினார்.*
*போராடக் கற்றுக்கொண்டார்.*
*கற்றவற்றைப் பிரயோகித்தார்.*
*பிரயோகித்ததை நிலைநாட்டினார்.*
*நிலைநிறுத்தியது விரிந்து செல்லும்.*
விரிவனவெல்லாம் இலக்கை அடையும்.

சிங்களம் [illegible] தலை அரசியலை [illegible] நெஞ்சில் இருத்துவோம். *

# விளையாட்டுத் துறையில் தமிழர்களை அரசு திட்டமிட்டுப் புறக்கணிக்கின்றது

## சபையில் சிவாஜிலிங்கம் எம்.பி. சாட்டை



கொழும்பு, டிசெ.14

விளையாட்டுத் துறையில் தமிழர்களை அரசு திட்டமிட்டுப் புறக்கணிக்கின்றது. தொடர்ச்சியாக ஆறு உலக சாதனைகளைப் படைத்த நீச்சல் வீரர் ஆழிக்குமரன் ஆனந்தனைக் கௌரவிக்க ஆட்சிபுரிந்த அரசுகள் தவறிவிட்டன.

பொதுமக்கள் தமது சொந்தச் செலவில் ஆழிக்குமரன் ஆனந்தனின் பெயரில் நீச்சல் தடாகம் ஒன்றை அமைக்க முற்பட்டபோது அரச அதிகாரிகளின் மூலம் அதனைத் தடுத்து விட்டீர்கள். ஏன் அவர் ஒரு தமிழர் என்பதாலா இவரைப் புறக்கணிக்கின்றீர்கள்?

- இவ்வாறு கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம். விளையாட்டுத்துறை அமைச்சின் குழு நிலை விவாதம் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போதே சிவாஜிலிங்கம் இதனைச் சுட்டிக் காட்டினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்தவை வருமாறு:-

வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் கிராமிய மட்டத்தில் பாடசாலைகளில் கல்வி அபிவிருத்திக்காக 40 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால், வடக்கு, கிழக்கு மாகாணத்தில் [illegible] ஒரு தமிழ், முஸ்லிம், சிங்கள பாடசாலை ஏனும் உள்ளடக்கப்படவில்லை. இப்படித் திட்டமிட்டு எமது பிரதேசங்களை ஒதுக்கி வைக்கிறீர்கள். இதுதான் நீங்கள் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்யும் இலட்சணமா?

அரசு தேசிய விளையாட்டு விழாக்களை நடத்திவருகின்றது. அப்போது பெறப்படும் தங்கம், வெள்ளி, வெண் பதக்கங்களின் பட்டியலைப் பார்க்கும்போது எமது பிரதேச இளைஞர் -யுவதிகளின் விளையாட்டு நிலைமை தெரியவரும்.

தற்பொழுது, வட மாகாணத்தில் ஊரடங்குச் சட்டம் இரவு ஒன்பது மணிமுதல் நடைமுறையிலிருக்கின்றது.

ஆனால், ஆறு மணிக்குமேல் ஆள் நடமாட்டம் இல்லை. எமது இளைஞர்-யுவதிகள் மாலை நேரத்தில் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபடும்போது, இராணுவத்தினர் அவர்களைச் சுற்றிவளைத்து துன்புறுத்துகின்றனர்.


அவர்களின் அடையாள அட்டைகளைப் பறித்துச் சென்று இளைஞர்- யுவதிகளை இராணுவ முகாம்களுக்கு வரச் சொல்கிறார்கள்.

அடையாள அட்டைகளைப் பெறச் செல்பவர்கள் பல தினங்கள் அலைக்கழிக்கப்பட்டு பின்னர், அடையாள அட்டைகளைக் கொடுக்கின்றனர்.

இவ்வாறு அடையாள அட்டையைப் பெற்றுக்கொண்டு திரும்பிய ஒரு இளைஞரைப்பின் தொடர்ந்த இராணுவத்தினர் அவரை இடைவழியில் சுட்டுக் கொன்றுள்ளனர் என்றார் சிவாஜிலிங்கம் எம்.பி. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



வேண்டத் தக்க தறிவோய் நீ! வேண்ட முழுதும் தருவோய் நீ!
வேண்டும் அயன் மாற்க் கரியோய் நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய் யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண் டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே!

# காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில்

## ஈழத்துச் சிதம்பரம்

## திருவாதிரை உற்சவம் - 2007

சிவநேயர்களே!

உஷக காலமாகிய மார்கழி மாதத்துப் பூரணையை அடுத்து வரும் திருவாதிரை நட்சத்திரத்தை நிறைவாகக் கொண்டு முன் பத்து நாள்களுக்கு நடத்தப்படுவதே திருவாதிரை உற்சவம். சிவபெருமானது அருள் மூர்த்தமாகிய ஆனந்தத் தாண்டவமாடும் நடராச மூர்த்திக்கே சிறப்பான இவ்விழா இந்தியாவிலே தில்லைச்சிற்றம்பலத்திற்குச் சமமாகத் தொன்று தொட்டே ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்று வருவது மரபு. இம்முறையும் திருவாதிரை உற்சவம் நாளை (15.12.2007) சனிக்கிழமை ஆரம்பமாகி பெரும் சிறப்பாக நடைபெறக் கூத்தபிரான் திருவருள் பாலித்துள்ளார்.

### திருவாதிரை உற்சவ விவரம்

**தினமும்:-** காலை 5 மணி திருப்பள்ளியெழுச்சி,
காலை 7 மணி அபிஷேகம், காலை பூசை 9 மணி,
திருவெம்பாவை ஓதுதல் 9.30 மணி, வசந்தமண்டபப் பூசை 11 மணி,
சாயரட்டைப் பூசை பி.ப. 4மணி, திருவெம்பாவை ஓதுதல்
மாலை 5 மணி, அர்த்தசாமப் பூசை 6 மணி

**வெள்ளோட்டம்** -ஐயனார் சிற்பத் தேர் வெள்ளோட்டம் - 22.12.2007 சனிக்கிழமை

**தேர் -** திருப்பள்ளி எழுச்சி பூஜை 4.30 மணி
ஸ்நபன அபிஷேகம் 5 மணி
காலைசந்தி பூஜை 6 மணி
திருவெம்பாவை ஓதுதல் 7.30 மணி
பஞ்சமூர்த்திகள் தேருக்கு எழுந்தருளல் 9 மணி
இரவு ஒரு மணி திருப்பள்ளியெழுச்சி
1.30 மணி மூலமூர்த்திகளுக்கு அபிஷேகம்
2.30 மணி வசந்த மண்டபத்தில் நடராஜப் பெருமானுக்கு அபிஷேகம், 6 மணி ஆருத்திரா தரிசனம்

**24.12.2007-** சாயரட்டை பூசை பிற்பகல் 3மணி
வசந்த மண்டபப் பூசை பிற்பகல் 3.30மணி
ஊடல் பிற்பகல் 4 மணி, தீர்த்தம் மாலை 5 மணி
திருவெம்பாவை ஓதுதல் மாலை 5.30 மணி

குறிப்பு: பத்து நாள்களும் தொடர்ந்து பேரூந்து சேவையும் மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) மாலையில் மணிவாசகர் விழாவும் சிறப்பாக நடைபெறும்.

(சி/54702)

**ஆ.அம்பலவி முருகன், மு.சுந்தரலிங்கம் - ஆதீனகர்த்தர்கள்.**

# ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்
IPDT
## Institution of Professional Development for Teachers

## பாடசாலை ஆதார முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி (அணி - 2) - 2008

## Dip. in School Based Management (Batch -2) - 2008

அனேகரின் வேண்டுகோள்களுக்கு இணங்கவும் எமது பிரதேச பாடசாலைகளின் அபிவிருத்தி கருதியும், மேற்படி ஒருவருட கல்வி முகாமை செய்முறைகள் களவேலைகளுடன் கூடிய டிப்ளோமா பாடநெறி ஆரம்பமாகின்றது. தொடருறு கல்வி மூலமாக எமது பாடசாலை அதிபர்கள், உப அதிபர்கள், தர - பாட இணைப்பாளர்கள், கல்வி முகாமைத்துவத்தில் ஆர்வமுள்ள ஆசிரியர்களுக்கு வாண்மைத்துவ அனுபவங்கள் வாயிலான தேர்ச்சிகள் இப்பாட நெறியினூடாக வழங்கப்படுகின்றது.

* நவீன கல்வி முகாமைப் பிரயோகங்கள் (பாடசாலை, கோட்டம், வலயம், மாகாணம், மத்திய)
* பாடசாலை நிதி / வள / ஆளணி / முகாமைத்துவம், புத்தாக்க முகாமைத்துவம் (5E, 5S)
* கலைத்திட்ட - இணைக்கலைத்திட்ட முகாமைத்துவம், அனர்த்த முகாமைத்துவம்
* முகாமைத்துவ பரீட்சியம் (களவேலை - கல்விச்சுற்றுலா), நெருக்கடி முகாமைத்துவம்
* செயல்திட்டம், பங்கேற்பு ஆய்வு (Participatory Research)
* முகாமைத்துவ தொடர்பாடலுக்கான ஆங்கிலம், தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவம்
* கல்வி - தொழில் வழிகாட்டல்முகாமை

ஆகிய விடயங்கள் உள்ளடங்கிய பரந்துபட்ட கல்வி முகாமை வாண்மைத்துவ அம்சங்களைக் கொண்ட பாடநெறி வார இறுதி - விடுமுறை நாள்களில் நடைபெறும். குழுச் செயன்முறைகள், களப்பகிர்வுகள், சமர்ப்பிப்புக்கள், சுயகற்றல், விடய ஆய்வுகள், நேரடியாகப் பாடசாலை - சமூகக் களங்களில் செயலாற்றுதல், கல்வி முகாமைத்துவ முகாம்கள், கல்விச் சுற்றுலாக்கள் என சர்வதேச கல்வி நிறுவகத்தின் தர நிர்ணயங்களுக்கு ஒப்பான வாண்மைத்துவ தேர்ச்சிகள் இப்பாட நெறியூடாக வழங்கப்படும்.

பாடநெறியில் பயில விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை (கஷ்டப்பிரதேச - வசதிகள் அற்ற - தூர இடங்களில் கடமையாற்றிய விடயங்களைக் குறிப்பிட்டு) நிரப்பி 14.01.2008ஆம் திகதிக்கு முன்னர் ***"பணிப்பாளர், ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம், இல.226, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்"*** என்ற முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பிவைக்கவும்.

*உதவிப்பணிப்பாளர்*
**த.சிவகுமார்.**
B.A. Dip. in Teaching,
Dip. in Psy (1st Class).

*பணிப்பாளர்*
**பா.தனபாலன்.**
B.A.(Cey.), PGDE (merit), Dip. in Psy (1st class),
Dip. in Guidance and Counselling, M.Phil in Education,
Cert. in Vocational Guidance (Singapore).

(68885)

### புராண படன நூல் வெளியீடு

சுழிபுரம்,டிசெ.14

உரையாசிரியர் அமரர் சைவமணி சி.மருதபிள்ளை நினைவாக திருவாதவூரர் புராண படன நூலை மலிவுப் பதிப்பாக பஜனைச் சபையார் வெளியிட்டுள்ளனர். இந்நூலைத் தபாலில் பெற்றுக்கொள்ளலாம். (202-28)

# தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - கொடிகாமம்

## பதவி வெற்றிடம்

கீழ்க்குறிப்பிடப்படும் பதவிக்கு சங்க எல்லைப் பரப்பிலுள்ள சேவை மனப்பான்மையுடைய, முழு நேரமாக உழைக்கும் ஆர்வமுடைய, தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தற்காலிக கிளை முகாமையாளர்கள்**

**வயதெல்லை :** 18-40 வரை விண்ணப்பம் முடிவுறும் திகதியன்று இருத்தல் வேண்டும்.

**தகைமை:** க.பொ.த. (சாதாரணம்) தமிழ், எண்கணிதம் உட்பட நான்கு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்தவராக இருத்தல்வேண்டும்.

**வேதனம்:** சகல படிகளும் உள்ளடங்கலாக வேலை செய்யும் நாளொன்றுக்கு ரூபா 250 வழங்கப்படும்.

**விண்ணப்பப் படிவங்கள் அனுப்புதல்**

சங்கத் தலைமையகத்தில் ரூபா 20 செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 22.12.2007ஆம் திகதிக்கு முன்னதாக *'பொதுமுகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ சங்கம், கொடிகாமம்'* என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு குறித்த பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடுதல்வேண்டும்.

*தென் கி. ப.நோ.கூ. சங்கம்,*
*கொடிகாமம்.* (சி/54700)

**பொதுமுகாமையாளர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**தம்பியையா தியாகராசா**

இகம்
10 ✱ 10 ✱ 1930

பரம்
25 ✱ 11 ✱ 2006



திதி: பூர்வபக்க பஞ்சமி
14.12.2007

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய்
அணையாத தீபமாய்
அவனியில் நாம் வாழ வழிகாட்டிய
எம் பிதாவே!
ஆண்டொன்று ஆனாலும் ஆறாது
எம் துயரம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய புவனேஸ்வரி அம்மனையும்
சாந்தியடி வைரவப் பெருமானையும் பிரார்த்திக்கின்றோம்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
**குடும்பத்தினர்.**

(68850)

# நிகழ்வுகள்

நீர்வேலி, டிசெ.14

சிவஸ்ரீ ப.குருநாதக்குருக்கள் இயற்றிய ''விக்கினம் தீர்க்கும் விநாயகர்'' நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு கோப்பாய் வடக்கு இலுப்பையடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி.கிழக்கு பிரதேச செயலாளர் சி.ஏ. மோகன்றாஸ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைப்பார்.

(202-224)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், டிசெ.14

நவாலி மகாவித்தியாலய அதிபராக பதவி உயர்வு பெற்ற இரா.வசந்தகுமாருக்கு நாளை மறுதினம் பிற்பகல் 3 மணிக்கு நவாலி வேலக்கை பிள்ளையார் ஆலய இந்துசமய அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் பாராட்டு விழா இடம்பெறவுள்ளது.

மானிப்பாய் இந்து சமய அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் அ.மு.அருணாசலம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ப.ஜெயக்குமாரகுருக்கள், பசுமைப்புரட்சியாளர் வை.செகரராஜசிங்கம் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவர்.

இரா.வசந்தகுமார் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் சிரேஷ்ட ஆசிரியராக, உப அதிபராக நீண்டகாலம் கடமையாற்றிய பின்னர் நவாலி மகாவித்தியாலயத்திற்கு அதிபராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார், மானிப்பாய் - நவாலி பிரதேச மக் கள் இந்தப் பாராட்டு விழாவை ஒழுங்குசெய்துள்ளனர். (202-95)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், டிசெ.14

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வெள்ளிதோறும் நடத்தும் வாராந்த நிகழ்வில் இன்று இணுவில் இளந்தொண்டர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் ஞானச்சுடர் வெளியீடும் இடம்பெறும்.

இளைப்பாறிய அதிபர் பண்டிதர் சி.வேலா [illegible] (202)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
02 ✱ 06 ✱ 1965

விண்ணில்
14 ✱ 12 ✱ 2006



## அமரர் நாகலிங்கம் ஜெயேந்திரன் *(இந்திரன்)*

ஓடியதோ ஓராண்டு உம்மை இழந்து
உணர்விழந்து கலங்குகிறோம் எங்கே சென்றாய்?
தேடியலை கின்றோமே திசைகள் பார்த்து
திகைத்தோமே எம்முயிரே மீண்டும் வாராய்
வாடி அழும் மனைமக்கள் உறவோர் யாரும்
வழிபார்த்து தொழுதோமே வல்லோன் பாதம்
நீடியநற் கருணை பெற்று நிதமும் வாழ
நிறைவாக அஞ்சலித்தோம் அமைதிகொள்க.


கச்சாய் வீதி,
சாவகச்சேரி. (சி/54635)

*பிரிவால் வாடும்:*
**குடும்பத்தவர், உறவினர்கள்.**

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
15 ✱ 07 ✱ 1947

இறப்பு
05 ✱ 12 ✱ 1997



## அமரர் கே.கே.இராசரத்தினம்

(K.K.Rajaratnam Jewel House)

திதி: பஞ்சமி

அன்பின் உறைவிடமாகி எமையெல்லாம்
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய
எம் அன்புத் தெய்வம் - அப்பா
கழிகின்ற பொழுதெல்லாம்
விழிகளில் நீர் சுமந்து
உங்கள் நினைவுகளில் மிதக்கின்றோம் - அப்பா
ஆண்டுகள் பத்துக் கடந்தாலும்
உங்கள் நினைவால் துன்பம்
தாங்காமல் துடிக்கிறது எம் இதயம் - அப்பா.

அரசடி வீதி, தாவடி வடக்கு,
கொக்குவில். (68881)

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மனமாற்றம் வராமல் களமாற்றம் வராது!

ஆள்கள் காணாமல் போகும் வீதத்தில் இலங்கை தான் முன்னணியில் திகழ்கின்றது என்று இலங்கைக்கு உலக சாதனைக் கிரீடம் சூட்டியிருக்கின்றது ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு.

தற்போது ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் குறுகிய ஒரு வாரகால அமர்விலும் - ஆறாவது கூட்டத் தொடரிலும் - இலங்கை குறித்து ஒரு பிடி பிடிக்கப்பட்டிருக்கின்றது.

அந்தக் கூட்டத் தொடரில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கையில் சீர்கெட்டு வரும் மனித உரிமைகள் விவகாரம் குறித்து பல்வேறு விடயங்களை - விலாவாரியாக - சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

* இலங்கையில் சுயாதீன மனித உரிமைகள் ஆணைக்குழு நியமிக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் அதற்கு சர்வதேச ரீதியில் மதிப்பும் மரியாதையும் இருந்தன. ஆனால், அந்த ஆணைக்குழுவுக்கு ஒழுங்கீனமான முறையில் ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டமையாலும், நம்பகத்தன்மையற்ற அதன் செயற்பாடுகளும் அந்த ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மை தொடர்பான நம்பிக்கையைச் சிதறடித்து விட்டன.

* உயர்மட்டக் கொலைகள், ஆள்கள் கடத்தப்பட்டுக் காணாமற்போனமை போன்ற முக்கிய சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்காக இலங்கை ஜனாதிபதியால் விசேட விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டபோது அதன் செயற்பாடும், பெறுபேறுகளும் குறித்து உயர்ந்த எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால் அது நியமிக்கப்பட்டு ஒரு வருட காலம் கடந்தும் எதுவுமே நடக்கவில்லை. அந்த ஆணைக்குழுவின் விசாரணைகளைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட சர்வதேசப் பிரமுகர்கள் குழுவும் அந்த ஆணைக்குழு சர்வதேச தரங்களுக்கு அமைவாகத் தனது நடவடிக்கைகளை முன்னெடுக்காமை குறித்துக் கவலையும் விசனமும் வெளியிட்டிருக்கின்றது.

* இந்த மனித உரிமை விவகாரப் பிரச்சினைகளைக் கவனிப்பதற்குப் பல்வேறு முன்முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என இலங்கை அரசு கூறினாலும் இத்தகைய - பெரும் எண்ணிக்கையிலான - மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்கவும், நம்பகத்தன்மையுடைய விதத்தில் பகிரங்கமாகப் பொறுப்புச் சுமத்தவும் போதுமான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவே தெரியவில்லை.

- இப்படி நேரடியாகவே சுட்டிக்காட்டியிருக்கின்றார் ஆர்பர் அம்மையார்.

இலங்கையில் மனித உரிமை நிலைவரங்களை அண்மைக்காலத்தில் இங்கு வந்து சென்ற பல ஐ.நா.அதிகாரிகள் நேரடியாக அவதானித்து உறுதிசெய்த பின்னர் தங்களின் விஜயங்களின் முடிவில் அம்பலப்படுத்திச் சென்றிருக்கின்றார்கள்.

அவசரகால மனிதாபிமானப் பணிகளுக்கான ஐ.நா. பிரதிச் செயலாளர் ஸேர் ஜோன் ஹோம்ஸ் -

யுத்தத்தில் சிக்கிய சிறுவர்களின் நலனைப் பேணும் ஐ.நா. தொடர்பாளரின் விசேட பிரதிநிதி அலன் றொக்-

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் -

சித்திரவதைகள் விடயம் பற்றிய ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி மான்பிரட் நொவாக்-

இப்படிப் பலர் வந்து சென்று விட்டார்கள்.

இதேவேளை, சர்வதேச ரீதியில் இடம்பெயர்ந்தோரின் விவகாரங்களைக் கையாளும் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி கலாநிதி வோல்டர் கலின் இலங்கையில் இச்சமயம் விஜயம் மேற்கொள்ள ஏற்பாடாகியிருந்தது.

அதேபோன்று, வல்வந்தமாக அல்லது இணக்கமின்றி காணாமற் போகச் செய்யப்பட்டோர் குறித்து ஆராயும் ஐ.நா.செயற்குழுவின் தலைவரும், பிரதிநிதியுமான சந்தியாகோ கோர்க்கியுராவும் இலங்கைக்கு விஜயம் செய்து விடயங்களை நேரில் கண்டறிவதற்கான வாய்ப்பை அளிப்பதற்கு இலங்கை அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இப்படி எத்தனை பிரமுகர்கள் - எத்தனை சர்வதேசப் பிரதிநிதிகள் - ஐ.நாவிலிருந்தோ அல்லது பிற சர்வதேச மட்டங்களிலிருந்தோ இங்கு வந்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டு, எத்தனை அறிக்கைகளை வெளியிட்டாலும் -

ஆள்கடத்தல், காணாமற் போகச் செய்தல், படுகொலைகள், கப்பம் கோரல், ஆள்களைப் பணயம் வைத்து அச்சுறுத்திக் காரியங்களைச் செய்தல் போன்ற கொடூரமான மனித உரிமை மீறல்களை அடியோடு நீக்கும் திடசங்கற்பமும், மன உறுதியும், மனமாற்றமும் இலங்கை அரசின் பாதுகாப்புத் துறைத் தலைமைக்கு ஏற்படாதவரை -

களநிலைமையில் மாற்றம் ஏதும் நிகழவே மாட்டாது என்பதுதான் யதார்த்தம்; நிதர்சனம்; மெய்மை நிலை.

# பிரிட்டிஷ் தூதருக்கு அரசு நாடாளுமன்றில் கண்டனம்

கொழும்பு,டிச.14

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் டொமினிக் சில்கொட் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற டட்லி சேனாநாயக்காவின் ஞாபகார்த்த உரையில் கலந்துகொண்டு இலங்கை தொடர்பாகவும் புலிகள் தொடர்பாகவும் ஆற்றிய உரைக்கு இலங்கை அரசு நாடாளுமன்றில் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

அவர் அரசிற்கும் இந்நாட்டுக்கும் எதிராகச் செயற்படுகிறார் என்றும், புலிகளுக்கு ஆதரவாகப் பேசுகின்றார் என்றும் அரசின் பிரதான கொரடா ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கூறினார்.

எமது நாட்டுப் பிரச்சினையில் சில்கொட் மூக்கை நுழைக்கக் கூடாது என்றும் எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்வோம் என்றும் அமைச்சர் ஜெயராஜ் காட்டமாகக்குறிப்பிட்டார்.

டொமினிக் சில்கொட் ஆற்றிய உரை தொடர்பாக ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ நேற்று நாடாளுமன்றில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றினார்.

அவ்வுரைக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் ஜெயராஜ் மேற்கண்டவாறு கூறினார்.

**புலிகளை அங்கீகரிக்கிறார்**

அமைச்சர் ஜெயராஜ் அங்கு கூறியவை வருமாறு:-

சில்கொட் எமது நாட்டின் வரலாற்றை மறந்துவிட்டார். எமது நாட்டை இன்னும் காலனித்துவ நாடாகவே அவர் நினைத்துக் கொண்டிருக்கின்றார் போலும்.

அவர் எமது அரசையும் இந்நாட்டையும் மிகவும் தாக்குகின்றார். இலங்கை இப்போது பிரிட்டனுக்குக் கீழான காலனித்துவநாடல்லஎன்பதை அவர்உணர்ந்து கொள்ள வேண்டும். எமது பிரச்சினையில் தலையிடுவதை அவர் நிறுத்த வேண்டும்.

புலிகளின் நோக்கம் சரியானது என்றும், புலிகள் போராடும் விதமே பிழையானது என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

சில்கொட் புலிகளை இதன்மூலம் அங்கீகரிக்கின்றார். புலிகளுக்கு ஆதரவாகப் பேசுகின்றார். அவர் இனிமேல் இவ்வாறான கூற்றுக்களை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

சில்கொட்டின் இவ்வாறான கூற்றுக்களை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இனிமேல் அவர் இலங்கைப் பிரச்சினையில் மூக்கு நுழைப்பதை நிறுத்த வேண்டும்-என்றார். (சி)

# இலக்கியப் பேரவை பரிசுகளும் கனகசெந்தி கதாவிருதுகளும்

யாழ்ப்பாணம், டிசெ.14

இலங்கை இலக்கியப் பேரவை மற்றும் யாழ்.இலக்கிய வட்டப் பரிசளிப்பு விழா வரும் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டத்தில் நடைபெற இருக்கிறது.

இலங்கை இலக்கியப் பேரவை மற்றும் யாழ்.இலக்கிய வட்டத்தின் தலைவர் செங்கை ஆழியான் க.குணராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் இலக்கியப் பேரவை பரிசு பெறுவோருக்கான பரிசுகளுடன் கனகசெந்தி கதா விருதுகளும் வழங்கப் படவிருக்கின்றன.

ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இவ் விழாவில் வாழ்த்துரைகளை ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகளும், அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளையும் வழங்குவர். பரிசளிப்பு உரையை பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் நிகழ்த்துவார்.

'ஈழத்தின் பெண்படைப்பாளிகள்'' என்ற தலைப்பில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் உரை நிகழ்த் துவார். விழாவில் மயிலங்கூடலூர் பி.நடராஜா (கவிஞர் ஆடலிறை) கௌரவிக்கப்படுவார். கௌரவிப்புரையை கவிஞர் வே.குமாரசாமி நிகழ்த்துவார்.

**இலக்கியப்பேரவைப்பரிசுபெறுவோர்**

கலாநிதி மு.இரகுநாதன் (ஆய்வு)- ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்- 2003

கலாநிதி மு.திருநாவுக்கரசு (ஆய்வு) டானியல் எழுத்துக்கள்- 2004

செங்கை ஆழியான்- (சிறுகதை) கூடில்லா நத்தைகளும் ஓடில்லா ஆமைகளும் -2003

தேவன்- யாழ்ப்பாணம் சிறுகதைகள் (சிறுகதை) (2004), நெடுந்தீவு லக்ஸ்மன் (கவிதை) உயிர் மூச்சு (2003), த.ஜெய சீலன் (கவிதை) கைக்குள் சிக்காத காற்று (2004), கவிஞர் சோ.பத்மநாதன் (கவிதை) நினைவுச் சுவடுகள் (2005), கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி (சிறுவர் இலக்கியம்) பாப்பாபா (2004), ஆடலிறை (சிறுவர் இலக்கியம்) குழந்தைப் பாடல்கள் (2005), அருட்திரு சி.ஜே.அன்ரனி பாலா (பல்துறை) சீர் அமைத்த சிற்பி (2005), கலாநிதி அருட்கவி சீ.விநாசித்தம்பி (சமயம்) தெய்வீக அருட் புகழ் (2005).

**சான்றிதழ் பெறுவோர்**

கலாநிதி பேராயர் சு.ஜெபநேசன் (ஆய்வு), கலாநிதி கி.விசாகரூபன் (ஆய்வு), செங்கைஆழியான் (நாவல்), தாமரைச்செல்வி (நாவல்), மலைமகள் (சிறுகதை), கவிஞர் சு.அடைக்கலம் (சிறுவர் இலக்கியம்), சு.பொ.கனகசபாபதி (சிறுவர் இலக்கியம்), அருட்திரு ரூபன்மாரியாம்பிள்ளை (பல்துறை).

**கனக செந்தி கதாவிருது பெறுவோர்**

செம்பியன்செல்வன் (மயாவதியின் கனவு), ஐ.சாந்தன் (மீளுதல்), குந்தவை (நாடும் மக்களும்), சட்டநாதன் (பொழுது), செங்கைஆழியான் (ஓ வெள்ளவத்தை), யோகேஸ்வரி சிவப்பிரகாசம் (காணவில்லை). (ப)

# இன்று ஒளிவிழா

பண்டத்தரிப்பு சென்.மேரிஸ் மூன் பள்ளி நடத்தும் ஒளிவிழா இன்று பி.ப 1.30 மணிக்கு பண்டத் தரிப்பு சிந்தா றோ.க.த.க. வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட் திரு.எம்.ஜேசுரட்ணம் அடிகளாரும் சிறப்பு விருந் தின ராக வலி தென்மேற்கு பிரதேசசபை பண்டத் தரிப்பு பட்டின உப பணிமனைப் பொறுப் பதிகாரி ஞானச்சந்திரனும்கலந்துகொள்வர். (1-135)

# திருவெம்பாவை நாளை ஆரம்பம்

யாழ்ப்பானம்.டிசெ,14

குடாநாட்டில் உள்ள ஆலயங்களில் நாளை சனிக்கிழமை திருவெம்பாவை திருவிழா ஆரம்பமாகிஎதிர்வரும்24ஆம்திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில்நாளை காலை 5.45 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியும் 6 மணிக்கு பூசையும் 6.30 மணிக்கு திருவெம் பாவை ஓதுதலும் 7.30 மணிக்கு திரு வாத ஆரடிகள்புராணபடனமும் இடம் பெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி மார்கழி திருவாதிரையுடன் திருவெம்பாவை திருவிழா நிறைவடையும் (203)

* * *

வலி.தென்மேற்கு, டிசெ.14

பெரியவிளான் வடசேரி விக்னேஸ்வரன் (பிள்ளையார்)ஆலயத்தில்திருவெம்பாவை உற்சவம் நாளை ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்இந்த உற்சவத்தில்தினமும்பூசை வழிபாடுகளும் திருவெம்பாவை பாடல் ஓதுதலும் நடைபெறவுள்ளன. (1-135)

* * *

வலி.தென்மேற்கு, டிசெ.14

மாதகல் பாணாவெட்டி (ஸ்ரீபுவனேஸ்வரி) அம்மன் ஆலயத்தில் திருவெம்பாவை உற்சவம் நாளை ஆரம்பமாகவுள்ளது. காலையில்திருவெம்பாவை பாடல் ஓதுதல், திருவாதவூர் அடிகள் புராணம் வாசிப்பு மற்றும்பூசை வழிபாடுகள் உற்சவகாலத்தில் தினமும் நடைபெறவுள்ளன. (-1-135)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 29 | சனிக்கிழமை 15.12.2007 |
| திதி : சஷ்டி | பி.இ 02.03 |
| நட்சத்திரம் : | அவிட்டம் பி.ப 05.41 |
| சுபநேரம் | : 03.21 - 04.51 |
| ராகுகாலம் | : 09.21 - 10.51 |

விநாயகர் [illegible] விரதம், திருவெம்பாவை ஆரம்பம்

# திருவெம்பாவை நோன்பிருந்தால் நினைத்த காரியங்கள் கைகூடும்

மலவிருளில் தூங்கி காலத்தை அவமே போக்காமல் எம்பெருமான் அருட்சுனையில் முழுக வருக என கன்னியர்கள் இல்லங்கள் தோறும் தூங்கிக்கொண்டிருக்கும் பாவையரைக் கூவி அழைத்து நீர் நிலைகள் நாடிச்சென்று நீராடுவது போல் மாணிக் கவாசகப் பெருமானால் திருவெம்பா வைப் பாடல்கள் 20 உம் பாடப்பெற் றன.

பக்திக்கொரு மாதம் மார்கழி. கன்னியரின் எண்ணமெல்லாம் தமக்கு வாய்க்கும் கணவர் இப்படிப்பட்ட வராகத்தான் இருக்க வேண்டும் என எண்ணுவது இயற்கை. திருவெம் பாவை நோன்பிருக்கும் கன்னியர்களும் எம்பெருமான் இடத்தில் இதையே வேண்டுகின்றனர்.

*''உன்னைப் பிராணாகப் பெற்ற உன் சீரடியோம்*
*உன்னடியார் தான் பணிவோம்.*
*ஆங்(கு) அவர்களே பாங்காவோம்.*
*அன்னவரே என் கணவர் ஆவார். அவர் உகந்து*
*சொன்ன பரிசே தொழும்பாய் பணி செய்வோம்*
*இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்*
*என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்!''*

எனத் திருவெம்பாவை 9ஆம் பாடலிலும் -

*''எங்கள் பெருமான் உமக்கொன்றுரைப்போம் கேள்*
*எங்கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க*
*எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க*
*கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க*
*இங்கிப் பரிசே எமக்கெங்கோன் [illegible]!*
*[illegible]கிழில் என் ஞாயி(று) எமக்கேலோர் எம்பாவாய்''*

எனப் பத்தொன்பதாம் திருப்பாடலிலும் கன்னியர்கள் வேண்டுகின்றனர்.

எனவே கன்னியர்கள் மார்கழித் திங்களிலே பரமன் புகழ்பாடி தமக்கு நல்ல கணவர் கிடைக்க வேண்டும் என நோன்பிருப்பதை உணரமுடிகிறது.

வைகறைத் துயிலெழும் கன்னியர் பரமன்புகழ்பாடி பொங்கும் புனலாடி, திருக்கோயிக்குச் செல்லும் போது அவர்கள்வதனங்களில் அழகு சொட்டும்.

எம்பெருமான் ஆட வல்லானும்

## ஞானக்கதிர்

அபிஷேகப்பிரியர், ஆருத்ர அபிஷேகமும் இறைவனுக்குப் பின்னிரவு வேளையிலேயே நடைபெறும். இந்த அபிஷேகம் முடிவுற்று அதிகாலை வேளையில் இறைவனும் இறைவியும்பக்தர்களுக்கு கொடுக்கும் காட்சியே ஆருத்ர தரிசனம் எனப்படும்.

தில்லையில் இக்காட்சிகள் சிறப்புற நடைபெற்றாலும், அதேபோன்ற தரிசனம் நமது ஈழத்துச் சிதம்பரத்திலும் கிடைப்பது நாம் செய்த புண்ணியமே.

இம்முறை நாளை(15.12.2007) சனிக்கிழமை திருவெம்பாவைத் திருவிழா ஆரம்பமாகி எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமைவரை நடைபெறவுள்ளது.

*ஐயா! நீர் ஆட்கொண்(டு) அருளும் விளையாட்டின்*
*உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்(து)*
*ஒழிந்தோம் எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்!*

என சிற்சபேசனை இறைஞ்சி, சிதம்பர தரிசனம் பெற்றுய்வோமாக.

-அ.நா.குழந்தைவேலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு நலனுக்கு உழைக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான் சிறுவனாக இருந்தபோது ரயிலிலும், பஸ்ஸிலும் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்துள்ளேன். அப்போது தமிழ், சிங்கள மக்கள் சொந்தச் சகோதரர் போன்று பழகினோம். இங்கு யசூசி அகாஷி கூறிய கருத்துக்களும் சமாதானத்தைக் கொண்டு வரும் என்று எதிர்ப்பார்ப்பதற்கு இல்லை. ஆனால், முரண்பாடுகள் இடம்பெறாமல் தடுக்கும்.

நோர்வே மற்றும் இணைத்தலைமை நாடுகளும் இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவருவதற்கு முயன்று வருகின்றன. அந்த முயற்சி வெற்றியளிக்கப் பிரார்த்திக்கின்றேன் - என்றார்.

ஜப்பானின் விசேட தூதுவர் அகாஷி தமது உரையில் குறிப்பிட்டதாவது:-

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சர்வமத சமாதான மாநாடு இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரு தொடக்கப்புள்ளி.

கடந்த இருபத்தைந்து வருடகாலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வுகளில் இந்த சர்வமத சமாதான மாநாடு முக்கியத்துவம் வாய்ந்தது என்றே நான் கருதுகின்றேன்.

அரசு ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றது. ஆனால், உள்ளூர் மனித உரிமை ஆணைக்குழுவால் மக்களின் உரிமைகளைப் பேணுவதற்கு ஆக்கபூர்வமாக எதுவும் செய்ய முடியாத நிலையே காணப்படுகின்றது - என்றார்.

**கம்போடியா 1977 இல் இருந்த நிலை**

கம்போடிய பௌத்த பிக்குவான ரொப்வெப் தமது ஆசியுரையில் கூறியவை வருமாறு:-

நான் நேற்று யாழ்ப்பாண நகரைச் சுற்றிப்பார்த்தபோது 1977 ஆம் ஆண்டு கம்போடிய நகரமொன்றில் இருந்த நிலையே இங்கும் காணப்படுவதை உணர்ந்தேன். இலங்கையிலுள்ள அனைத்து இன மக்களும் இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவருவதற்குத் தமது கரங்களைக் கோர்த்துக்கொள்ள வேண்டும். இந்த நாட்டில் அனைவரும் சமமாக வாழ ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன் - என்றார்.

நேற்றைய கலந்துரையாடலில் கலந்துகொண்ட இந்து, கிறிஸ்தவ, மதகுருமாரும் மௌலவிகளும், பொதுமக்களும் தற்போதைய சூழ்நிலை தொடர்பாகப் பல்வேறு விடயங்களையும் சபையில் முன்வைத்தனர்.

கொலை, கடத்தல், உயிர் அச்சுறுத்தல் காரணமாகச் சரணடைந்தோர் தங்கவைக்கப்பட்டுள்ள இடத்தில் காணப்படும் இடநெருக்கடி, மீனவர்களின் பிரச்சினைகள், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மக்களின் அன்றாட வாழ்வாதாரப் பிரச்சினைகள், இடம்பெயர்ந்தோரின் அவலங்கள், யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் அவலங்கள், ஆயுதக்குழுக்களின் நடமாட்டம் என்பன குறித்த தகவல்களையும், இன்றைய அவலநிலையையும், அடக்குமுறைச் செயற்பாடுகளையும் சர்வமதப் பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறினர்.

(அ 120)

# வடக்கு - கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

* நாட்டின் வடக்கு, கிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்குக் கடற்பிரதேசங்களில் இடியுடன் கூடிய கடும் மழை பெய்யும்.
* மேற்கொண்ட பகுதிகளில் கடுங் காற்று வீசும்.
* தீவைச் சூழவுள்ள கடற்பிரதேசங்களில் கடும் கொந்தளிப்பு காணப்படும்.
* வங்காள விரிகுடாவில் 12ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு அம்பாந்தோட்டைக்குக் கிழக்கே உருவான தாழமுக்கம் மட்டக்களப்பு கடற் பிரதேசத்தை அண்மித்துள்ளது. அது வட மேற்குப் பகுதியை நோக்கி நகரலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும்போது தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்ளவேண்டாம். இலத்திரனியல் பொருள்கள் செயலிழக்கச் செய்யப்பட வேண் டும் - என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏற்கனவே கடற்தொழிலுக்குச் சென்றவர்களுக்கு காலநிலை பாதிப்புக் குறித்து அறிவிக்க வேண்டும் என்றும்-

விசேடமாக கரையோரப் பகுதி மக்களும் அவதானமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டும் என்றும் கடற்றொழிலாளர்கள் அடுத்த 24 மணிநேரத்துக்கு கடலுக்குச் செல்லாமல் இருக்க வேண்டும் - என்றும் பலாலிப் படைத் தலைமையகம் அறிவுறுத்தியது. (அ-1)

(முன்னர் வந்த செய்தி 3ஆம் பக்கத்தில்)

# அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகின்றது.

ஏற்கனவே அரசுத் தரப்பில் இருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நான்கு எம்பிக்கள் வெளியேறி எதிரணிக்கு வந்துவிட்டனர்.

அரசுத் தரப்புக்கு அதிர்ச்சி தரும் விதத்தில் இன்னும் சில குத்துக்கரணங்கள் - அரசுத் தரப்பிலிருந்து எதிரணிக்கு 'பல்டி'கள் - இன்று இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசுத் தரப்புக்கு இன்று சபையில் அதிர்ச்சிகள் காத்திருக்கும் என்று எதிரணியின் மூத்த பிரமுகர் ஒருவர் நேற்று அடித்துக் கூறினார்.

அது சாத்தியமாகுமா? அல்லது எதிரணியினரின் முயற்சி புஸ்வாணமாகுமா? - என்பது இன்று மாலை நாடாளுமன்ற வாக்களிப்பின்போது தெரிந்துவிடும்.

அரசுப் பக்கத்திலிருந்து சிலர் எதிரணிப்பக்கம் தாவி, எதிர்க்கட்சிகளின் தரப்பைப் பலப்படுத்தினாலும்கூட, எதிரணித் தரப்பிலிருக்கும் ஜே.வி.பி., நாடாளுமன்ற ஆசனங்களின் அட்சரகணிதக் கணக்குக்கு அமைய வாக்களிப்பில் கலந்துகொள்ளும் தனது எம்.பிகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்து, கடைசி நேரத்தில் அரசைக் காப்பாற்றுவதற்கும் வாய்ப்புகள் உண்டு எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்தப் பின்னணியில், அரசின் தலைக்கு மேல் தொங்கிக்கொண்டிருக்கும் கத்தி, தலையில் விழுமா அல்லது தள்ளி விழுமா என்பது இன்று மாலைக்கு முன் தெளிவாகிவிடும் என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். (அ-உ)

# அரசுத் தரப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரக் ஹோட்டலான ஜெய் ஹில்டனில் அரசுத் தரப்பில் இருக்கும் எம்.பிமார் சிலர் பலவந்தமாக - வலுக்கட்டாயமாக - 50, 60 மெய்ப்பாதுகாவலர்கள் சூழ - சிறையில் அடைபட்டவர்கள் போன்று தங்கவைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்களை வெளியே விட்டால் எதிரணியினர் வளைத்துத் தம்பக்கம் இழுத்துவிடுவார்கள் என்ற பீதியிலேயே அரசுத்தலைமை இப்படி நடந்துகொள்கிறது. எதிரணியினர் இந்த எம்.பிக்களுடன் தொடர்பு கொள்வதற்கு வாய்ப்பளிக்காமல் தடுக்கும் நோக்கிலேயே இப்படி எம்.பிக்கள் சிறைவைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு எம்.பிக்களை அடைத்து வைத்திருப்பது கேலிக்குரிய விடயம்.

நாம் (ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர்) அரசிலிருந்து விலகியதால் அவர்கள் வெளிப்படையாகவே பெரும் பீதியில் உறைந்துபோயிருக்கின்றனர்.

இந்த அரசுடன் எங்களுக்குத் தனிப்பட்ட ரீதியில் குரோதம் எதுவும் கிடையாது. அவர்களின் கொள்கை தொடர்பிலேயே நாங்கள் கடும் விரத்தி அடைந்துள்ளோம்.

இந்த அரசு தற்போது மிகமோசமான அடாவடித்தனம் மற்றும் கீழ்த்தரமான அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றது. அவர்கள் தங்களுடைய பெரும்பான்மையைக் காப்பாற்றும் நோக்கிலேயே செயற்பட்டு வருகின்றார்கள்.

வரவு - செலவுத்திட்ட வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைக் கலந்துகொள்ளாமல் செய்வதற்கு, அந்த எம்.பிக்களின் குடும்ப உறுப்பினர்களைக் கடத்தியிருக்கின்றனர். இதற்கு முன்னரும் - 2ஆம் கட்ட வாசிப்பின் மீதான வாக்கெடுப்பின்போதும் அரசு இவ்வாறான வேலையைச் செய்திருக்கிறது.

நாட்டில் சட்டவிரோதமாக இயங்கிவரும் ஆயுதக்குழுக்களுக்கு அரசு தொடர்ந்தும் ஆதரவு வழங்கிவருகின்றது.

நாம் அரசிலிருந்து விலகியவுடன் எமது பாதுகாப்பு அனைத்தையும் அரசு நீக்கியது. அத்துடன் நாங்கள் அரசிலிருந்து வெளியே வந்து பொதுமக்களுடன் சேர்ந்து மேற்கொள்ள விருக்கின்ற ஜனநாயக ரீதியான போராட்டத்தை அரசு முடக்க முயல்கின்றது. எனினும் எமது போராட்டம் சர்வதேசம் வரை செல்லும்.

அரசு எமது கொள்கைகள், நிலைப்பாடுகள், நாம் கிளப்பிய பிரச்சினைகள் தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் எடுத்து, உரிய முறையில் செயற்படமுன்வருமானால் அரசிலிருந்து வெளியேறிய எமது முடிவை நாம் மீளப் பரிசீலனைசெய்வோம்.

எமது அமைச்சுப் பதவிகள் இல்லாமல் போகின்றமை குறித்து நாம் கலைப்படமாட்டோம் - என்றார் ஹக்கீம். (அ-உ)

# பலாலி சென்ற பயணிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றிப் பத்திரமாக இறக்கப்பட்டனர்.

இந்த விமானம் வழமைபோல பலாலியில் நண்பகல் 12 மணிக்கு இறங்க ஆயத்தமானபோது 'தானியங்கி'முறையில் அதன் தரையிறக்க 'கியர்'களை இயங்க வைக்க விமானிகள் முயன்றனர். ஆனால், அது இயங்கவில்லை. எனவே, கையினால் (MANUAL) அதை இயக்க முயற்சித்தனர். அதுவும் பலன் தரவில்லை.

ஆகவே, தரையிறங்குவதற்கான 'கியர்'கள் விழாத நிலையில் வல்வந்தமாக விமானத்தைத் தரையிறக்கும் முயற்சியை பலாலியில் மேற்கொள்ளாமல், இரத்மலானைக்குத் திரும்பும் படி விமானிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. அதனால் விமானம் இரத்மலானைக்கு மீண்டது. எனினும், அங்கு அவசர இறக்கத்துக்கான ஆபத்து உதவிகள் குறைவு என்பதால் விமானத்தை கட்டுநாயக்கவுக்கு வழிப்படுத்தினர்.

கட்டுநாயக்காவை விமானம் நெருங்கியதும் அங்கும் கட்டாய இறக்கத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் சர்வதேச விமான சேவை பாதிக்கப்படும் என்பதால் விமானம் மீண்டும் இரத்மலானை விமானநிலையத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டது.

எரிபொருள் பெருமளவு தீர்ந்த நிலையில் - அம்புலன்ஸ்கள், தீயணைப்புக் கருவிகள் ஆயத்த நிலையில் தயாராக நிறக - விமானம் தரையிறங்கு 'கியர்'கள் விழாத நிலையில் நண்பகல் 1.45 மணிக்கு - இரண்டே முக்கால் மணி நேரத்தின் பின்னர் - கட்டாயத் தரையிறக்கம் செய்யப்பட்டது.

எனினும் பயணிகள் பாதிப்பு ஏதுமின்றி, பல மணி நேர மரண அவஸ்தையின் பின்னர், பத்திரமாக ஏறிய விமானத்தளத்திலேயே - திரும்பவும் இறங்கினர்.

'எக்ஸ்போ' நிறுவனத்தின் நேற்றைய இரண்டாவது சேவை தடைப்பட்டிருந்த போதிலும், இரத்மலானைக்கும் பலாலிக்கும் இடையேயான மாலைச் சேவை எந்தவித தடங்கலும் இன்றி நடைபெற்றது என்றும் -

இன்றைய மூன்று சேவைகளும் இடம்பெறும் என்றும் - அந்நிறுவனத்தின் யாழ். அலுவலக அதிகாரி நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார். (அ-1)

# 'சீலிங்' இற்குள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும் காயமடைந்திருக்கின்றனர்.

சம்பவத்தில் தற்கொலை அங்கியை வெடிக்க வைத்த இருநபர்களும் உடல் சிதறிப்பலியாகியுள்ளனர் எனப் பாதுகாப்புப்பிரிவினர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 5.10 மணியளவில் இடம்பெற்றிருக்கிறது.

கூரையின் 'சீலிங்' இற்குள் ஒளித்து இருந்த சந்தேகநபர்கள் குறித்துக் கிடைத்த துப்பு ஒன்றை அடுத்து படையினர் மற்றும் பொலிஸார் அந்த வீட்டை சுற்றி வளைக்க முற்பட்டனர் என்றும் -

அவ்வேளையிலேயே இந்த நபர்கள் தற்கொலை அங்கியை வெடிக்கவைத்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் வல்வெட்டித்துறை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

அடையாளம் காணாத நிலையில் இரு இளைஞர்களின் சடலங்கள் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் நேற்றுமாலை பொலிஸாரால்ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ-1-226-218)

# அன்ரன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கின்றன.

இதனிடையே அன்ரன் பாலசிங்கத்தின் உருவச் சிலையொன்று முல்லைத்தீவில் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

நாளை சனிக்கிழமையும் தமிழ் ஊடக அறிவியற் கல்லூரியின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் வணக்க நிகழ்வும், நினைவுப் பேருரையும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


## இலங்கை மின்சார சபை, யாழ். பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றி அறிவித்தல்

*கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலைகளைச் செய்யும் பொருட்டு நாளை (15.12.2007) சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.*

உரும்பிராய்,கோண்டாவில், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ்.மாநகர சபை பகுதி.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னாகம். (சி/54710)

## THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
A/L DAY CLASS
PHYSICS
MECHANICS
ஆரம்பம் :
13.12.2007
Tue,Thu : 4:00-5:30
HEAT
Sat, Sun :11:00-12:30
செந்தில்குமரன்

## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில்
கிராம சேவையாளராக கடமையாற்றும்

### சபாரத்தினம் கனகசபாபதி

(கிராம உத்தியோகத்தர், காரை கிழக்கு J/42) அவர்கள் 13.12.2007 அன்று திடீரெனக் காலமானார். அன்னாரது பிரிவினால் ஆழ்ந்த கவலையடைகிறோம். பிரிவால் துயருற்றிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உதவி அரசாங்க அதிபர் பணிமனை,*
*காரைநகர்.*
நலன்புரிச் சங்கம்

## பொருளியற் கல்லூரி
## K.K.S. வீதி, இணுவில்

எமது நிறுவனத்தில் இவ்வாண்டு சித்தியெய்திய மாணவர்களை வாழ்த்தி மீண்டும் புதிய பிரிவு ஆரம்பமாகின்றது.

★ தரம் 5 புலமைப்பரிசில்
ஆசிரியர் திரு.கலாமோகன்
(Dip.In Teach)

வகுப்பு நாள்கள்:- சனி, ஞாயிறு -7.30 Am
வியாழன் - 3.30 Pm
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்

*குறிப்பு:- இவ்வாசிரியரின் வகுப்புகள் சித்தங்கேணி BARATHY கல்விநிலையத்திலும் நடைபெறுகின்றன.*

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேசத்தின் கிராம சேவையாளர்

### சபாரத்தினம் கனகசபாபதி

அவர்கள் மறைவை அறிந்து துயரடைகின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி,ஆசிரியர்கள்,மாணவர்கள்,
ஐடியல் அக்கடமி.
*யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் - காரைநகர்.*

## ICT Classes
For Grade 10 & 11
Medium : English / Tamil
P.R.Najan B.Sc.
150/2, Kulapiddy Junct.,
K.K.S.Rd.,Kokuvil.
T.P:- 0602214294

## ICT Grade 10 And G.C.E. O/L
Grade 10 - Fundamentals of ICT(Hardware)
G.C.E. O/L - Programming(VB6/SDLC)
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
R.Kumaran - B.Sc. T.P 0776577359 New Batches

புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!
## CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291



15.12.07 (Sat)
Certificate in Internet & E-Mail
விடுமுறைக் காலத்தை வீணடிக்காதீர்கள்
Kid's Programmes (Grade 1- 9)
ICT (Grade 10 & 11)


# மரண அறிவித்தல்கள்

## இராஜசிங்கம் லூயிஸ் அல்பிறட் (கனடா)

வசாவிளான் உத்தரியமாதாகோவிலடியைப் பிறப்பிடமாகவும், மிசுஸ்சாகா, கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திரு.இராஜசிங்கம் லூயிஸ் அல்பிறட் கனடாவில்நேற்று (13.12.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராயப்பு இராஜசிங்கம்-தங்கம்மா தம்பதியினரின் அருமை மகனும், காலஞ்சென்ற பிலிப்பானந்தம்-இராசம்மா தம்பதியினரின் மருமகனும், நேசமலரின்அன்புக் கணவரும்,றாஜினி,சிலோஜினி, நிறஞ்சினி,தேவாஜினி, கொட்வின்ஆகியோரின் அன்புத்தந்தையும், றெஜினா, இராசாத்தி, இம்மானுவேல், பிலோமினா (மயிலங்கூடல், இளவாளை), லூட்ஸ்,வணபிதா பீற்றர் துரைரெட்ணம் (பங்குத்தந்தை,அச்சுவேலி) பேர்ணடேத் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

இறுதிச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**வணபிதா பீற்றர் துரைரெட்ணம்**
*(பங்குத்தந்தை,அச்சுவேலி-சகோதரன்)*

## சபாரத்தினம் கனகசபாபதி

[குட்டிவிதானையார்- கிராமசேவையாளர், காரைநகர் கிழக்கு,J/42]

காரைநகர், நீலிப்பந்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் கனகசபாபதி நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசி ஆறுமுகம் சபாரத்தினம்-தங்கரத்தினம் தம்பதியினரின் மகனும்,சாந்தமலரின் கணவரும், இரத்தினசபாபதிபிள்ளை, சகுந்தலாதேவி, சண்முகரத்தினம் (தபாலதிபர்-காரைநகர்), ஆறுமுகம்பிள்ளை (ப.நோ.கூ.ச., காரைநகர்), சறோஜினிதேவி, குணநாயகம் (குணம்மாஸ்ரர்), இராசநாயகம் (பிரதம முகாமைத்துவ உதவியாளர்-மாவட்ட வைத்தியசாலை, ஊர்காவற்றுறை), சுந்தரேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் கணபதிப்பிள்ளை (சிவகணேசன் ஸ்ரோர்ஸ், கே.பி), றஞ்சிதமலர், சொர்ணாம்பிகை, நாகராசா, குமாரதேவி, அன்பரசி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2007) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு அன்னாரின் நீலிப்பந்தனை, காரைநகர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org